இன்னமும் நினைவிழந்த நிலையில் அண்ணா

Registered as a News paper in Ceylon

விலை சதம் 15

ஈழநாடு

EELANADU

மலர் 10

தபால்பெட்டி எண்: 49

இதழ்356

போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 21 ஜூல்க: 15 திங்கட்கிழமை [3-2-69]

சென்னை, பெப், 3

தமிழக முதலமைச்சர் அண்ணாதுரை இன்னமும்நினைவிழந்த நிலையிலேயே இருப்பதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது. எனினும் உடல்நிலையில் சிறிது அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகவும்உடல் உஷ்ணம் 98 டிகிரி பெரனைட்டில் இருப்பதாகவும் ஆஸ்பத்திரி வைத்திய அறிக்கை தெரிவித்தது.

நேற்றுமுன் தினம் இருந்த நாடித்துடிப்பு வேகம் சற்றுக் குறைந்து நேற்றிரவு சாதாரண நிலையிலிருந்தாக வைத்திய அறிக்கை கூறியது.

டாக்டர் சதாசிவம் தலைமையிலமைந்த வைத்திய நிபுணர் குழு தொடர்ந்து தீவிர சிகிச்சையளித்து வருகின்றனர்.

தமிழ் நாடு கவர்னர்சர் தார் உஜ்ஜல் சிங்கும் அவரது மனைவியாரும் அடையாறுஆஸ்பத்திரிக்கு சென்று பார்த்தனர். இவர்கள் சுமார் ஒரு மணி நேரம் வரை ஆஸ்பத்திரியிலிருந்தனர்.

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியமும் அண்ணாவைப் போய்ப் பார்த்தனர்.

நேற்றிரவு 8.45 மணிக்கு வெளியான வைத்திய அறிக்கையில் அண்ணாதுரையின் நாடித்துடிப்பு நிமிடத்துக்கு 96 ஆகயிருப்பதாகவும் அவரது சிறுநீர் வெளியேற்றம் திருப்திகரமாகயிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

ராணுவம் - பட்டதாரிமாணவர் பேராதனையில் மோதல்

30 பேர் காயமுற்றனர்

ஒரு வாரத்துக்கு பல்கலைக்கழகம் மூடப்பட்டது

கண்டி, திங்கள்

கண்டியில் நடைபெறும் சுதந்திரதின விழாவையொட்டி கண்டிக்கு வந்துள்ள இராணுவச் சிப்பாய்களுக்கும் பேராதனை பல்கலைக் கழக மாணவர் சிலருக்குமிடையில் நேற்று நடைபெற்ற ஒரு கைகலப்பில் மூன்று பட்டதாரி மாணவர்களும் இரண்டு ராணுவச் சிப்பாய்களும் பலத்த காயங்களுடன் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக்கைகலப்பில் எல்லாமாக 30 பேர் காயமுற்றதாகத்தெரிவிக்கப்பட்டது.

இங்குவந்த ராணுவலொறிகளுக்கு பல்கலைக்கழக மாணவர் தொடர்ந்து கற்களை வீசியதாகவும் சிலர் ராணுவத்தினரைப் பார்த்து நையாண்டிக் கூச்சலிட்டதாகவும் இதனைத் தொடர்ந்தே இக்கைகலப்பு ஏற்பட்டதாவும் கூறப்படுகிறது.

மாற்றப்பட்டனர்

கை கலப்புப்பற்றி செய்தி கிட்டியவுடன் ராணுவ தளபதி அட்டிக்கலை பேராதனை பல்கலைக்கழகத்துக்கு விரைந்து அங்கு முகாமிட்டிருந்த ராணுவ வீரர்களை கல்கமுவாவுக்கு செல்லுமாறு உத்தர விட்டார்.

மூடப்பட்டது

நிலைமையை உத்தேசித்து பல்கலைக்கழக உபவேந்தர் பல்கலைக் கழகத்தை ஒரு வாரத்துக்கு மூடும் படி உத்தரவிட்டுள்ளார்.

இராணுவத்தினர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முகாமிட்டுள்ளனர் அங்குள்ள மாணவர் சிலர் இராணுவத்தினரைப் பார்த்து நையாண்டிக் கூச்சலிட்டது தான் இக் கைகலப்புக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

இராணுவத்தினரைக்கண்டிக்கு அனுப்பும் பொழுதே தளபதி அவர்களிடம் பேசுகையில் ''கூச்சலிடுவது உற்சாகப் படுத்துவதற்கான மகிழ்ச்சி ஆரவாரம்'' என்றும் எச் சமயத்திலும் பொறுமையை இழந்து விடக் கூடாதென்றும் புத்திமதி கூறிஅனுப்பியிருந்தார்.

பேராதனைப் பொலிசாரும், கண்டியிலிருந்து அனுப்பப் பட்ட மேலதிக பொலிசாரும் அமைதியைப் பாதுகாப்பதற்காக இங்குரோந்து சுற்றி வருகின்றனர்.

கனிஷ்ட பல்கலைக்கழகத்தை பிரதமர் திறந்தார்

பம்பலப்பிட்டி, திங்கள் குழியாப்பிட்டியாவில் புதிய கனிஷ்ட பல்கலைக் கழகத்தை பிரதமர் திரு. டட்லி செனநாயகா நேற்று மாலை ஆரம்பித்து வைத்தார்.

200 மாணவர்கள் இந்த கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இக் கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் தொழிற்கல்விபயிற்றுவிப்பதற்கான ஏற்றஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அரசாங்கத்துக்கு ஆதரவை நீடிப்பதா?

தமிழரசுக்குழு அடுத்தமாதம் இறுதி முடிவு செய்யும்

நல்லூர், திங்கள்

தேசீய அரசாங்கத்துக்கு தமிழரசுக்கட்சி இப்பொழுது நிபந்தனையுடன் அளித்து வரும் ஆதரவைத் தொடர்ந்தும் அளித்துவருவதா அல்லது அந்த ஆதரவையும் விலக்கிக்கொள்வதா என்பதுபற்றி நேற்று யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் நடந்த கட்சிப் பொதுக் குழுக்கூட்டத்தில் சிறிது நேரம் விவாதிக்கப்பட்டதாகவும் ஆனால் இது பற்றி அடுத்தமாதம் 15-ந் திகதி மட்டக்களப்பில்நடைபெறவிருக்கும் கட்சியின் நிர்வாகசபைக் கூட்டத்தில் இறுதிமுடிவு எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

கட்சியின்தலைவர்பதவிக்கு வந்துள்ளமூவரின் விண்ணப்பங்களில் இம் மாதம் 20ந் திகதிக்குமுன்இருவர் தமது விண்ணப்பங்களை வாபஸ் பெற்றால் மற்றவர் ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுவார். விண்ணப்பங்கள் வாபஸ்

(8- ம்பக்கம்பார்க்க)

நெடுஞ்செழியன் தலைமையில் அடையாறு ஆஸ்பத்திரியில் அமைச்சரவை கூடியது

சென்னை, பெப்.3

தமிழக அமைச்சரவை நேற்று திரு அண்ணாதுரை சிகிச்சைபெற்று வரும் அடையாறு ஆஸ்பத்திரியில் கூடியது.

கல்வி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் தலைமையில் அமைச்சரவை ஒரு மணி நேரம் முக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தியது.

கவர்னரின் உரை மீதான விவாதம்சட்டசபையில் அடுத்தகூட்டத் தொடரை எப்போது நடாத்துவது, வரவு செலவுத்திட்டம் என்பன பற்றி அமைச்சரவை ஆராந்ததாகவும் அடுத்த கூட்ட தொடரை எப்போது நடத்துவது என்பதில் முடிவு எடுக்கப்பட்டவில்லை யாவும் தெரிவிக்கப்பட்டது.

கேரள முதலமைச்சர் வந்தார்

கேரள முதலமைச்சர் திரு. எஸ். நம்பூதிரிபாத் நேற்று திரு. அண்ணாதுரையைப் பார்வை யிடுவதற்காக அடையாறு ஆஸ்பத்திரிக்கு வந்தார். அண்ணா விரைவில் குணமடைய வேண்டுமென்பதே தமது பேராவல் என அவர் தெரிவித்தார்.

தராவிடகழகத் தலைவரும் நேற்று அண்ணாவைப் பார்வையிட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

தேவை

படுத்தித்துறை ஆசிரியை ஒருவருக்கு குழந்தையை பராமரிப்பதிலும், சமையலிலும் நன்கு அனுபவம் நிறைந்த தேக ஆரோக்கிய முள்ள 50 வயதிற்குட்பட்ட பெண் ஒன்று தேவை. விளம்பர இலக்கம் 518, C/o ஈழநாடு, 63, சிவன்கோவில் மேற்குவீதி, யாழ்ப்பாணம். 518

தேவை

நெல்
3 புசல் கொண்ட மூடை ஒன்று (இடை 140 ரூத்தல்) கொண்டு வந்து கொடுப்பவர்களுக்கு மூடை ஒன்றிற்கு ரூபா 45 - வீதம் கொடுக்கப்படும். நெல் விற்க விரும்புவோர் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். மாப்பியன் மில் - மானிப்பாய், மாப்பியன் மில் - சுதுமலை. 638

திருமண அழைப்பு

மயிலிட்டி காங்கேசன்துறையைச் சேர்ந்த யாழ்ப்பாணம் சைவாசிரிய கலாசாலையின் இளைப்பாறிய அதிபர் திரு. கி. சுவாமிநாதனின் இளைய மகன் **பாலேந்திராவுக்கும்** (பொறியியலாளர், அரசாங்க வேலைப்பகுதி), சுன்னாகம் இளைப்பாறிய கிராம விதானையார் திரு. ச. மண்டலநாயகத்தின் மூத்தமகள் **பத்மலோஜினிக்கும்** தைத் திங்கள் 25ஆம் நாள் (7-2-69) இரவு 8-36க்கும் 9-50க்கும் இடைப்பட்ட நல்வேளையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் திருமணம் நிகழும். மறுநாள் (8-2-69) மாலை 4-00 மணி தொட்டு 7-00 மணிவரை மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும். நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனித் தனி அழைப்புகள் இல்லை. 783

இப்பொழுது நடைபெறுகிறது
விஸ்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30, 9-45.
★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், ராஜஸ்ரீ நடித்த
G. N. வேலுமணி அளிக்கும்
குடியிருந்த கோயில்

முதல் முறை திரையிடப்பட்டபொழுது அனேக ரசிகர்களைப் பரவசப்படுத்தி அமோக வெற்றியீட்டிய சேலம் மாடர்ன் தியேட்டர்சாரின் முதல் முழுநீள வர்ணப்படம்! மீண்டும் அனேகரின் விருப்பத்திற்கிணங்க...
வெலிங்டன் — யாழ்நகரில்
தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.
★ பானுமதி
★ வீரப்பா ★ தங்கவேலு
★ சந்தியா ★ சக்கரபாணி
நடித்த
அலிபாபாவும் 40 திருடர்களும்
(கேவா கலர்) (புத்தம்புதிய கொப்பி)
அத்துடன் காண்பிக்கப்படுகின்றது!
மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
S. S. வாசன்
அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்
மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!
தமிழ்நாடுசென்று விழாவைப் பார்க்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

"விரைவில் மகாவலி வடக்கே திரும்பும் கேரதீவு பாலம் அமைக்கப்படும்"

நாவற்குழியில் அமைச்சர் உறுதி

சாவகச்சேரி, ஞாயிறு

வடபகுதி வரட்சியைப் போக்குவதற்காக மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் திட்டம் விரைவில் நிறைவேறும்.

நாவற்குழிக் கிராமசபை அலுவலகத்திற்காக ரூபா 12,000 செலவில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை திறந்துவைத்து உரைநிகழ்த்திய உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

இக் கூட்டத்திற்கு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமை வகித்தார். நாவற்குழிக் கிராமசபை சார்பாக ஒரு வரவேற்புப்பத்திரம் தமிழிலும் ஆங்கிலத்திலும் வாசித்து அமைச்சருக்கு வழங்கப்பட்டது.

நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு. சடாட்சரம் பேசுகையில், நாவற்குழிப் பகுதிக்கு ஒரு சந்தை வேண்டுமெனவும், நூல்நிலையம், மின்சாரம் ஆகியன வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணம் - கேரதீவுக் கடல் மூடப்பட்டால் மன்னருக்குச் செல்வதில் 70 மைல் தூரம் குறையுமெனவும், எனவே கேரதீவு, சங்குப்பிட்டி கடலுக்குப் பாலம் அமைப்பது அவசியமெனவும் நாவற்குழி கிராமசபைத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

கிராமசபைத் தலைவரின் கோரிக்கைகள் யாவற்றிற்கும் பதிலளித்துப்பேசிய அமைச்சர் திரு. பிரேமதாசா கூறியதாவது:

கேரதீவு - சங்குப்பிட்டிக்கு விரைவில் பாலம் நிறுவ நடவடிக்கை எடுப்பேன். நாவற்குழி கிராமசபைக்கு சந்தை கட்டுவதற்காக வேண்டும் பணம் கடனுக வழங்கப்படும். இப் பணத்தை 40 ஆண்டுகளுக்குள் 4 வீத வட்டியுடன் கட்டவேண்டும். நூல்நிலையம் கட்டுவதற்காக ரூபா 10,000 நான் கொழும்பு திரும்பியதும் அனுப்பி வைப்பேன். திரு. வே. சிவசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

பாடி பேசினராம்

இளம்பெண் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

பாட்டி பேசியதால் வேதனை அடைந்ததாகக் கூறப்படும் 13வயது இளம் பெண்ணொருவர் நச்சுத் திராவகம் அருந்தி மரணமானராம்.

இந்தப் பரிதாப சம்பவம் நேற்றுமாலை அரியாலைப்பகுதியில் நடைபெற்றதாகப் பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மரணமான சரஸ்வதியின் [வயது 13] மரணம் சம்பந்தமாக இன்று காலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரண விசாரணை நடைபெற்றது.

மரணவிசாரணை நடத்திய அதிகாரி திரு. என். இராசநாயகம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்(கா. நி)

புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலிக்கு நல்லூர் திருநெல்வேலி ராஜபாதைக்கு ஊடாக புதிய பஸ்சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை வடபகுதி இ. போ. ச. தலைமைக் காரியாலயம் மேற்கொண்டுள்ளது. [கா. நி.]

இடமாற்றம்

அளவெட்டி, ஞாயிறு

காங்கேசன்துறை பட்டின சபையின் மின்சாரப் பகுதியிலிருந்து தராகக் கடமையாற்றிய திரு. மயில்வாகனம் இம்மாதம் முதல் யாழ். மாநகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர், கே.ஆர். விஜயா நடித்த
பொன்னை வாழ்வு
யாழ்நகரில் திரையிடப்படாத புத்தம் புதிய வெளியீடு!
இணுவில்
ஸ்ரீ காளிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - பத்மினி நடித்த
ஸ்ரீ வள்ளி
(கேவா கலர்)
3-வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)
ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - பத்மினி நடித்த
ராஜா ராணி
MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, & 9-45 p. m.
Pre Poya-Poya 10-30 a. m.
Terry Thomas
in
DOCTOR TO THE MOON
(Color - Scope)

4 ஆண்டுகளில் தமிழர் முன்னேறியுள்ளனர்

அமைச்சர் வரவேற்புக் கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி.

சாவகச்சேரி, ஞாயிறு

'இப்பகுதியில் தண்ணீர்ப் பிரச்னை பற்றி எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. ஆறுகளும் மலைகளுமுள்ள மலை நாட்டிலேயே இப்பிரச்னை பெரிதாக உள்ளது. இப் பிரச்னைதீர வழிசெய்வேன்' என சாவகச்சேரிப் புதிய பஸ்நிலையத்தைத் திறந்து வைத்த உள்ளூராட்சிஅமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா, டிறிபேக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

பூனையிலிருந்து வந்த அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவை சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியிலிருந்து சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், சாவகச்சேரி நகரசபைத்தலைவர் திரு. சு. கனகரத்தினம் ஆகியோர் அமைச்சரை ஊர்வலமாக அழைத்து வந்தனர். பல வர்த்தகர்கள் அமைச்சரை வரவேற்று மாலையணிந்தனர்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப்பேசிய சாவகச்சேரி எம் பி. திரு. வி. என். நவரத்தினம் கூறியதாவது:-

'கடந்த நான்கு வருடங்களாகத் தமிழர் பல வழிகளிலும் முன்னேற்றமடைந்து வருகின்றனர்.

ஐக்கியதேசியக்கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட நல்லுறவே தமிழ்மக்களின் முன்னேற்றத்துக்குக் காரணமாகும். சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் அன்புடனும் உரிமையுடனும்வாழ வேண்டும்.'

தமிழக முதலமைச்சர் அண்ணா சுகமடைவதற்கு அனைவரையும் பிரார்த்திக்கும்படி திரு. நவரத்தினம் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் திரு. பிரேமதாசாவைப் பேட்டிகண்ட தென்மராட்சிப்பகுதி உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்களினதும், தலைவர்களினதும் மகஜர்களைப் பரிசீலனை செய்த அமைச்சர் அதுபற்றித் தான் கவனிப்பதாக வாக்குறுதியளித்தார்.

உதடு துண்டித்த நிலையில் வாலிபர் ஆஸ்பத்திரியில்

வகுப்புக்கள்

வெள்ளவத்தை, ஞாயிறு

பொது எழுது வினைஞர் சேவையின் இரண்டாந்தர எழுது வினைஞர் பதவித் தேர்வுக்குத் தோற்றும் பரீட்சாத்திகளின் நன்மைக்காக அரசாங்க எழுது வினைஞர் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு விசேட வகுப்புகளை ஒழுங்கு செய்துள்ளது.

இந்தவகுப்புகள்தற்போது வெள்ளவத்தை அலெக்சாந்திரு றோட்டில் உள்ள ''நாவலர் ஹோலில்'' நடைபெற்று வருகின்றது.

பரீட்சைத் திணைக்களத்திலும் மேற்படி இரண்டாந்தர பதவி உயர்வுக்கான பரீட்சைக்குத் தயார் செய்யும் வகுப்புகள் நடைபெற்று வருகின்றது. கணக்கு வைத்தல் முறை, நிதிப் பிரமாணங்கள், நிர்வாகக் கைநூல் என்பனவே இப் பரீட்சைக்கான பாடங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், திங்கள்

தனது பழைய கோபத்தை வாலிபரின் உதட்டைக் கடித்து, துண்டாக்கியதன் மூலம் தீர்த்துக்கொண்டாராம் ஒருவர்.

இந்த வஞ்சம் தீர்க்கப்பட்ட செய்கையால் தனது கீழ்உதடு துண்டிக்கப்பட்டு இழந்த நிலையில் சாவகச்சேரியைச் சேர்ந்த முத்துக்கிருஷ்ணன் என்ற(24வயது) வாலிபன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதுவெறியில் வந்த இவரது பழைய கோபக்காரன் ஒருவர் சாவகச்சேரிச் சந்தைக்கருகாமையில் வைத்து இவ்வாறு வஞ்சம் தீர்த்ததாக பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் எவரும் இன்னும் கைதாகவில்லை.

சாவகச்சேரி பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். கா. நி.)

ரஷ்யா போர்தொடுத்தால் 'நேட்டோ'வுக்கு அணுகுண்டுதான் தஞ்சமளிக்கும்

பிரிட்டிஷ் மந்திரி கெரிவிக்கும் அச்சம்

லண்டன், பெப்.2

நேட்டோ நாடுகள் மீது சோவியத்யூனியன் பெரிய தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதால் அதைச் சமாளிக்க அணு ஆயுதங்களைப்பாவிக்க வேண்டும். இல்லையெனில் முற்றுக சரணடைய வேண்டும். அந்த அளவுக்கு கம்யூனிஸ்ட் படைபலம் பெருகியிருக்கிறதாம்.

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஹீலே இந்தக்கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஐரோப்பாவிலுள்ள நேசநாடுகளின் சுப்ரீம் கமாண்டருடன் பேச்சுக்கள் நடத்தியபின்னர் திரு. ஹீலே இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஐரோப்பாவிலுள்ள நேட்டோ படைபலத்தை தொடர்ந்து வலுப்பெறச் செய்யவேண்டுமென்று இருவரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் கிழக்கு-மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் நேசப்பான்மையை ஏற்படுத்த ஜனாதிபதி நிக்சன் நடவடிக்கைகள் எடுக்கும்படி அமெரிக்க அரசாங்கத்தின் வெளி நாட்டு ஆலோசகர்கள் வற்புறுத்தியுள்ளனர். வல்லரசுகளின் கூட்டமொன்றை நடத்தும்படியும் அவர்கள் திரு. நிக்சனுக்கு ஆலோசனைகள் கூறியுள்ளனர்.

பிரி.மந்திரியுடன் யுதாண்ட் ஆலோசனை

மேற்காசிய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பிரெஞ்சு அரசாங்கமும், ரஷ்யாவும் தெரிவித்துள்ளயோசனைகள் பற்றி ஐ.நா.பொதுக்காரிய தரிசி யுதாண்ட் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. ஸ்டுவார்ட்டுடன் ஆலோசனைகள் நடத்தியுள்ளார்.

அடிசபாபா செல்லும்வழியில் யுதாண்ட் பிரிட்டனில் தங்கினார்.

தனிச் சிங்களத்தில் அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள்

பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க சனசமூக நிலையத்தினர் உள்ளூராட்சி மந்திரி திரு. ஆர். பிரேமதாசாவிற்கு தனிச்சிங்களத்தில் தங்கள் கோரிக்கைகளைக் கொண்ட மகஜரைச் சமர்ப்பித்தனர்.

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு தெற்குப் பக்கத்திலுள்ள கடற்கரை மைதானத்தில் சேரி ஒழிப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தைக்கொண்டு வீடமைப்புத் திட்டமொன்று நிறுவும்படி மந்திரியிடம் அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டனர்.

யாழ்ப்பாண எம். பி. இது விஷயமாக தன்னிடம் தெரிவித்திருப்பதாகவும் வீடமைப்புத் திட்டத்திற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் மந்திரி பிரேமதாசா பேசும்போது கூறினார்.

யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு. ஏ. போல்ராஜ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாண எம். பி. அரசாங்க அதிபர் காரியாதிகாரி ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

சிரமதான முயற்சியால் நிறுவப்பட்ட 'கென்னடி அரங்கு' மைதானத்தை பிரேமதாசா திறந்து வைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர்களை சந்திக்க அயூப் தயார்

ராவல்பிண்டி, பெப். 2

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராய் இருப்பதாக நேற்று அறிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் பொறுப்புவாய்ந்த தலைவர்களை அழைத்து தாம் நாட்டின் நிலைபற்றி பேசத்தயாராய் இருப்பதாகவும், அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்வதுபற்றி அவர்கள் தெரிவிக்கும் ஆலோசனைகளை ஆராயவும் தாம் தயார் என்றும் அயூப்கான் அறிவித்தார்.

நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்காத வகையில் அரசியல் சாலனத்தில் மாற்றங்கள் செய்வதுபற்றி ஆலோசிக்க தமக்கு ஆட்சேபனை இல்லையென்று அயூப்கான் அறிவித்திருக்கிறார்

கி. பாக். மாணவர் விடுக்கும் எச்சரிக்கை

கராச்சி, பெப். 2

கிழக்கு பாகிஸ்தானில் பல நகர்களில்கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் விதிக்கப்பட்டுள்ள தடைஉத்தரவுகளை உடன்நீக்கும்படியும் துருப்புகளை வாபஸ் பெறும்படியும் கிழக்குப் பாகிஸ்தான் மாணவர் யூனியன் அயூப் அரசாங்கத்துக்கு இறுதி எச்சரிக்கையொன்றைவிடுத்துள்ளது.

டாக்காவிலும், நாராயங்காரிலும் துருப்புகள்அழைக்கப்பட்டிருக்கும்படி அவர்கள் அரசாங்கத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள். பொலிஸ் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களையும் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டிருப்பதையும் கண்டிப்பதற்காக நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மாணவர்கள் இந்த இறுதி எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்கள்.

ஜாலிபூரில் நேற்று ஆர்ப்பாட்டக்கும்பல் ஒன்றின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது ஒருவர் கொல்லப்பட்டார் மூவர் காயமடைந்தார்கள். குல்னாநகரில் பொலிசார் சூட்டில் பலர் காயமடைந்தார்கள்.

கிளிநொச்சி ப.ச.தலைவர்கள் பற்றி ஆட்சிமன்றத்தில் கேள்வி

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம்5-ந்திகதி ஆட்சிமன்றத்தில் திரு. கா. பொ. இரத்தினம், உள்ளூராட்சி அமைச்சரையும், தகவல் ஒலிபரப்பு அமைச்சரின் ஆட்சிமன்றக் காரியதரிசியையும் பின்வரும் கேள்விகளைக் கேட்பார்.

1968ம் ஆண்டுதைத் திங்கள் தொடக்கம் சென்றமாதம்முதலாம் திகதிவரைகிளிநொச்சிப் பட்டினசபையின் தலைவர்களாகக் கடமைஆற்றியவர்கள் யாவர்? எவ்வளவு காலம் கடமை ஆற்றினர்?

இவர்கள் ஒவ்வொருவரும் எவ்வெவ் இடங்களுக்குச் செல்வதற்கு வப் பொழுதுஎவ்வெக் காரணங்களுக்குப் புகையிரதஆணைச் சீட்டுக்கள் எடுத்தார்கள்?

இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பயணத்துக்கும் பெற்ற படிகளும்,புகையிரத ஆணைச் சீட்டுக்களின் பெறுமதியும் எவ்வளவு?

ஒவ்வொரு பயணத்தின் போதும் இவர்கள் சந்தித்த உத்தியோகத்தர்கள்யாவர்? பேசிய விடயங்கள் யாவை? இதனால்கிளிநொச்சிப் பட்டினம் பெற்ற பயன் யாது?

இந்த விடயங்களிற் பலவற்றைத் தந்திமூலமோ, தொலைபேசி மூலமோ, தூதுமூலமோ செய்து முடித்திருக்கலாம் என்பதை அறிவாரா? அன்றேல் ஏன்?

வங்கத்தில்
அண்ணு பள்ளி

கல்கத்தா, ஜன. 2

வங்கத்தமிழர் சங்கத்தால் அவுராவில் நடாத்தப்பட்டுவந்த இலவசதொடக்கப்பள்ளிக்கு 'அறிஞர் அண்ணு இலவச பள்ளி' என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அண்மையில் கூடிய செயற்குழுக் கூட்டம் இந்த முடிவை எடுத்துள்ளது.

ஆந்திராவில் அமைதி திரும்புகிறது

புதுடில்லி, பெப். 2

ஆந்திராவில் தெலுங்கானா கிளர்ச்சி நடைபெறும் பகுதிகளில்மீண்டும் நிலைமை மாமூலாகிக் கொண்டிருக்கின்றது. சில இடங்களில் மாத்திரம் ரயில்கள் நிறுத்தப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றன. மற்றும்படி ஏற்கனவே தடைபட்டிருந்த சிலரயில்கள் இன்று மீண்டும் ஓடத் தொடங்கின.

தண்ணீர் கஷ்டம்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

வேலணை அரசினர் பிரசவ விடுதிக்கும் வேலணை அரசினர் டிஸ்பென்சரிக்கும் தினமும் ஐந்து கலன் தண்ணீர் கோட்டா முறையில் வழங்கப்படுவதனால் மேலதிக தேவைக்காகத் தண்ணீரின்றி பிரசவத் தாய்மார்களும் டிஸ்பென்சரிக்குப் பொறுப்பா உள்ள அதிகாரியும் மிகுந்த கஷ்டமடைகின்றனர். இங்கு வழங்கப்படும் ஐந்துகலன் தண்ணீர் போதாமையினால் மேலதிகமான தேவைகட்கு குழாய்நீர் வசதியோ அன்றி வேறுவித வசதிகளோ செய்து தரும்படி வேலணை பகுதிமக்கள் வைத்திய அதிகாரிகட்கும் தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி.நவரத்தினத்துக்கும் பலமுறை முறையிட்டும் [illegible] வில்லையாம்.

ஆசிரியர்களின் ஓய்வு சம்பளத் திட்டம்

பண்டிதர் இரத்தினம் பிரேரணை

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சித் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பின்வரும் மூன்று பிரேரணைகளையும் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்றார்.

பாடசாலை ஆசிரியர்களுக்கு ஓய்வுச் சம்பளத் திட்டம் முதலியன, பாடசாலை ஆசிரியர்களுக்கும், ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு நடைமுறையிலுள்ள ஓய்வுச் சம்பளத் திட்டத்தின்படியே ஓய்வுச்சம்பளம் வழங்குவதற்கும் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்குரிய உரிமைகள் யாவற்றையும் வழங்குவதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

வித்துவான் பண்டிதர்கள்

பிராசீனபண்டிதர், வித்துவான் முதலிய தகைமைகள் பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனமளிப்பதற்கான திட்டம்,— சிங்கள மொழியையும், தமிழ்மொழியையும் கௌரவிப்பதைச் செயல்முறையில் காட்டுவதற்கு இம் மொழிகளை நன்கு கற்று, பிராசீன பண்டிதர், புலவர், பண்டிதர் என்னும் பட்டங்களில் ஒன்றைப் பெற்று வேலையின்றி இடர்ப்படுபவர்களில் ஒரு குறிப்பிட்டதொகையினரை யாகுதல் ஆண்டுதோறும் வித்தியாலயங்களில் ஆசிரியர்களாக நியமித்தற்கு அரசாங்கம் ஒரு திட்டத்தை வகுக்கவேண்டுமென வும், இத் திட்டத்தை இந்நிதியாண்டு முடியுமுன் செயற்படுத்தவேண்டும்.

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஓய்வுச் சம்பளத் திட்டம் முதலியன,- அரசாங்க கூட்டுத்தாபனங்கள் யாவற்றிலுமுள்ள ஊழியர்கள் எல்லோருக்கும் ஓய்வுச்சம்பளம்வழங்குவதற்கு. அரசாங்க ஊழியர் ஓய்வுச் சம்பளத்திட்டம் போன்ற தொரு திட்டத்தை அரசாங்கம் இந்நிதியாண்டுமுடியுமுன் வகுக்கவேண்டுமென வும், அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியர்கள் எல்லோரும் உள்ளூராட்சிச் சேவை போன்ற அரசாங்க கூட்டுத்தாபனச் சேவை ஒன்றின் ஊழியர்களாக ஆக்கப்பட வேண்டுமெனவும் இக் கூட்டுத்தாபனச் சேவையின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக கூட்டுத்தாபனச் சேவை ஆணைக் குழுவொன்று இந்நிதியாண்டு முடியுமுன் நியமிக்கப்பட வேண்டும்.

இலவசமாக கற்கலாம்

கொம்பனித்தெரு, ஞாயிறு

அரசாங்க இலாகாக்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இலவசமாக சிங்களத்தில் தட்டெழுத்து தமிழ் மூலமும் ஆங்கில மூலமும் கற்றுக்கொடுப்பதற்கு கல்வி இலாகா முன்வந்துள்ளதாகவும், இதுவரையும் பழைய அரசாங்க ஊழியரே இப்படிப்பட்ட இலவச வசதி பெற்றுவந்ததும், புதிதாகச் சேவையில் சேர்ந்தோர் தங்கள் சொந்தப் பணத்தின் மூலமே கற்றுவந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இனிமேல் சகல அரசாங்க ஊழியர்களும் இலவசமாக சிங்கள தட்டெழுத்தைக் கற்றுக்கொள்ள கல்வி இலாகாவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

திருடர் தொல்லை அதிகரிப்பு

அல்லைப்பிட்டி. ஞாயிறு

வேலணை மத்திய கல்லூரிக்கு அருகில் உள்ள ஒரு கூட்டுறவுச் சங்கக்கடையில் திருடர்கள்ஓட்டைப்பிரித்து உள்ளே சென்று அரிசிமூடைகளைக் களவாடிச் சென்றுள்ளனர். இது சம்பந்தமாக நிர்வாகிகள் பொலிசாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து ஊர்காவற்றுறைப் பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர் அண்மைக்காலத்தில் இப்பகுதியில் பல கூட்டுறவுக் கடைகள் உடைக்கப்பட்டு பொருட்களும். பணமும் திருடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஆத்திரத்திலிருந்து ஒழுங்கின்மை தோன்றுகிறது. விவேகமான எதிர்ப்பிலிருந்து ஒழுக்கம் பிறக்கிறது.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம் 21-ந் திகதி
(3-2-69)

மீண்டும் தி. மு. க. பூச்சாண்டி

இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்து அஞ்சுவதிலோ, சிறிய விஷயத்தையும் பூதாகாரமாகக் கற்பனை செய்து பீதியடைவதிலோ யாருக்கும் கெடுதியில்லை. ஆனால் மற்றவர்களுக்குப் பீதியூட்டி அதிர்ச்சியடையச்செய்வது மிக ஆபத்தான, கெடுதியான செயல். நல்வழி காட்டவேண்டியவர்களே இப்படியான செயல்களில் ஈடுபடுவதற்கு என்னதான் காரணமிருந்தாலும், அது வேதனையளிப்பதாகும்.

இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் "நாம் தமிழர்" இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டுமென அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமொன்று முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஸநாயகாவின் இல்லத்தில் நடந்த 'திரிநிக்காயசங்கசபா' என்னும் ஒரு பௌத்த சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட திரு. ஹேமா பஸநாயகாவும் மற்றும் பல பௌத்த குருமாரும் இங்கு தி. மு. கழகத்தின் 'நாம் தமிழர்' இயக்கம் நாட்டின் பல பகுதிகளிலும் தீவிரமாகப் பரவிவருவதாகவும் இதனால் நாட்டுக்குப் பெரும் தீங்கு ஏற்பட்டுக்கொண்டிருப்பதாகவும் கவலை தெரிவித்திருப்பதுடன் அரசாங்கத்தை மட்டும் நம்பாமல் சிங்கள மக்கள் மத்தியில் இந்த ஆபத்தை எடுத்துக்காட்டி இதைத் தடுக்கவேண்டுமென்றும் கூறியிருக்கின்றனர். சிங்கள மக்கள் மத்தியில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் நலனுக்கு, தேசீய ஒருமைப்பாட்டுக்குத் தீங்கு ஏற்படுத்தக்கூடிய சக்திகள் தலைதூக்கும் பொழுது அவற்றை நசித்து, நாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்நாட்டு மக்கள் அனைவருக்குமுண்டு. தீய சக்திகளைத் தலையெடுக்கவிடாமல் தடுக்கவேண்டிய பொறுப்பும் அனைவருக்கும் உண்டு. இதே சமயம் தீயசக்திகள் என்று கருதப்படுபவை தலைதூக்குவதற்கு அடிப்படைக் காரணமென்ன என்பதையும் ஆராயவேண்டியதும் அவசியம். இந்தியாவில் மொழி வாரி ராஜ்யங்கள் அமைக்கப்பட நேர்ந்ததற்கு அந்த ராஜ்யங்கள் மத்திய அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்டுவந்ததே காரணமென்று சொல்லலாம். இப்போது ஆந்திரா ராஜ்யத்தில் 'தெலுங்கானா' தனியாகப் பிரிக்கப்படவேண்டுமென மாணவர்கள் பெரும் கிளர்ச்சிநடத்துவதற்கும் தெலுங்கானாப்பகுதி பொருளாதார ரீதியிலும் மற்றும் பல துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டுவந்ததே காரணமாகும் எங்கே வறுமையும் கஷ்டமும் நிலவுகிறதோ, எங்கே மக்கள் அடக்கி, ஒடுக்கப்படுகிறார்களோ அங்கே 'கம்யூனிஸம்' வேரூன்றுகிறதென்பதும் அனைவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். திராவிட முன்னேற்றக்கழகம்' என்ற பெயரில் இங்கு ஓர் (மூன்று அமைப்புக்களும் இருந்ததுண்டு) அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்புக்கும் தமிழ் நாட்டில் ஆதித்தனார் ஆரம்பித்த 'நாம் தமிழர்' இயக்கத்துக்கும் என்ன தொடர்பு இருக்கிறதோ தெரியாது. அங்கு ஆதித்தனாரே தமது இயக்கத்தை கைவிட்டு தி. மு. கழகத்துடன் இரண்டறக்கலந்துவிட்டார். இங்குள்ள தி. மு. கழகம் தமிழ் நாடு தி. மு. கழகத்துடன் எந்தவித உறவும் வைத்திருக்கவில்லை; அப்படி உறவு கிடையாது என்று தமிழ்நாடு தி. மு. க. தலைவர்களே அறிவித்திருக்கின்றனர். அப்படியிருந்தாலும் கூட இங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் மாஸ்கோ, பீகிங்குடன் தொடர்புவைத்து அங்கு நடைபெறும் மகாநாடுகளிலும், குழுக்கூட்டங்களிலும் கலந்துகொள்வதில் தவறில்லையென்றால், இதில் என்ன தவறு? தி. மு. கழகம் நாட்டுக்குத் தீங்கானதென்றால் அந்தக்கழகம் இங்கு தலைதூக்கக் காரணமென்ன என்பதை ஆராயவேண்டாமா? தமிழ்நாட்டில் தி. மு. கழகம் தனதுபிரிவினை கோரிக்கையைகைவிட்டுவிட்டது. இங்குதமிழர் பிரிவினை கோருவதற்கு தி. மு. கழகம் உருவாகியுள்ளது எனவெறும் கூச்சல்போட்டு வளர்ந்துவரும் சிங்கள—தமிழ் ஐக்கியத்தை ஏன் குலைக்கவேண்டும்? தேசீய ஐக்கியத்திலும் நாட்டின் முன்னேற்றத்திலும் உண்மையான அக்கறையுள்ளவர்கள் தமிழ்மக்களின் குறைகளை அறிந்து அவற்றை நீக்க முன்வந்தால், ஏன்இங்கு இல்லாத ஒன்றை நினைத்து, அதைப் பெரிதுபடுத்தி அஞ்சவேண்டும்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் நடவடிக்கைகள் பற்றியோ, நாம் தமிழர் இயக்கம் பற்றியோ அரசாங்கம், அந்த சங்கசபாவின் வேண்டுகோளின் மீது ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும். அதைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. ஆனால் தேர்தல் காலம் நெருங்கி வருவதைக் கருத்தில் கொண்டு தி. மு. க., நாம் தமிழர் என்ற பூச்சாண்டி நாட்டில் வகுப்புவாதத்தைக் கிளப்பி ஆட்சிபீடமேற சுலபமான வழிகாண முயற்சிப்போர் மீது அரசாங்கம் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். மக்களும் விழிப்புடனிருக்க வேண்டும்.

சர்வாஉடைத்த பணம்கொடுத்த

தட்டையா உள்ளே

1956-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒருநாள் நள்ளிரவு 12 மணிக்கு ஒரு கட்டை உருவத்தை முதன் முதலாக ராயப்பேட்டையிலுள்ள ஹோட்டல் அமினில் கண்டேன். அப்பொழுது நான் சென்னையில் படித்துக் கொண்டிருந்த சமயம். ராயப்பேட்டையிலுள்ள 'தேவி விலாசில்' மேல் மாடியில் ஒரு அறையில் தங்கியிருந்தேன். ஹோட்டல் சர்வர் ஒருவர் நள்ளிரவில் வந்து என்னை எழுப்பி முன் கடையில் அண்ணா வந்திருக்கிறார் என்று தகவல் தந்தார். நான் ஆவலுடன் எழுந்து நேராக 'ஹோட்டல் அமி'னுக்குச் சென்றேன். ஒரு மேசையில் ஒருபுறத்தில் இருவர் கதைத்துக்கொண்டிருந்தனர். நான் மேசையின் மறுபுறத்தில் அமர்ந்துகொண்டு ஒரு சிங்கிள் டீக்கு ஓடர்பண்ணினேன். எனக்கு நேர் எதிராக அந்தக் கட்டை உருவம் அமர்ந்து, மறுநாள் நடைபெறவிருக்கும் கூட்டநிகழ்ச்சி பற்றி மற்றவருக்கு தெரிவித்துக்கொண்டிருந்தது. நானும் அவர்களைப் பார்த்தபடி அந்த உருவத்தை அவதானித்துக் கொண்டிருந்தேன். அந்த கட்டை உருவம்தான் திரு. சி. என். அண்ணாதுரை.

இளகிய மனசு

ஹோட்டலில் உள்ள பையன் அண்ணாதுரையுடன் கதைத்துக்கொண்டிருந்தவருக்கு வெந்நீர் கொண்டு வந்தபோது தவறுதலாக கிளாசைபோட்டு உடைத்துவிட்டார். அக் கடையில் வேலைசெய்யும் மற்றொருவர் அப்பையனின் காதில் முறுக்குவதை அவதானித்த அண்ணா பையன் காதில் முறுக்க வேண்டாமெனக் கூறி உடைந்த கிளாசுக்கு தான் காசு கொடுப்பதாகவும் தெரிவித்தார். அந்த சில நிமிட நேரத்தில் அவரின் இளகிய மனசை என்னால் புரிந்துகொள்ளமுடிந்தது. நள்ளிரவு 2 மணி வரை அந்த ஹோட்டலில் இருந்து ஆலோசனை நடத்தினார்கள். ஹோட்டலுக்கு வெளியில் சிலர் காத்துநின்றனர். ஹோட்டலுக்கு வலதுபக்கத்தில், சைக்கிள் ரிக்ஷோக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. வாடகைக்காரும் காணப்பட்டது. ஹோட்டலில் இருந்து வெளியில் நண்பருடன் வந்த அண்ணாமைலாப்பூருக்கு நடந்தே சென்றார். அப்பொழுது அவரின் ஒவ்வொரு செய்கையும் என்னை சிந்திக்கச் செய்தது,

அண்ணாவின் பேச்சு

பகலிரவாக கால்நடையாக எதற்காககண்விழித்து கஷ்டப்படுகிறார். தனக்காகவா, தன் குடும்பத்திற்காகவா, சொந்தக்காரருக்காகவா இல்லவேஇல்லை. தமிழருக்காக, தாழ்ந்துபோன தமிழகத்தைத் தழைத்தோங்கச் செய்வதற்காக தமிழன்னையை அரியாசனத்தில் அமர்த்துவதற்காக-தன்வாழ் நாளிலே தமிழ் நாடு பெற்றுக்கொடுப்பதற்காக தமிழுக்காக தமது உடலையே அர்ப்பணித்தார். அவர் கண்ட கனவு, அவரின் லட்சியம் இன்று நிறைவேறிவிட்டது. மக்கள் ஆட்சி தமிழகத்தில் மலர்ந்துவிட்டது. 'தமிழ்நாடு' பெயர் சூட்டப்பட்டுவிட்டது.

ஹோட்டலில் அண்ணாவைக் கண்டபின்னர் அவரைப் பார்க்கவேண்டும், பேச்சைக் கேட்கவேண்டும் என்ற ஆவல் தலைஎடுத்தது. அண்ணாவின் கூட்டம் எங்கிருந்தாலும் சென்றுவிடுவேன். திராவிட முன்னேற்றக் குழு ஒன்று, நாட்டில் உள்ள நிலைமைபற்றி ஆராய்ந்து ஒவ்வொரு கிராமமாகச் சுற்றுப்பயணம் செய்து, தி. மு. க.விற்கு உள்ள செல்வாக்கைப்பற்றி அறிக்கை சமர்ப்பிக்க சென்னை வந்திருந்தது. அப்பொழுது ஈ. வே. க. சம்பத் தி. மு. க.விலிருந்தார். சென்னையில் உள்ள ஒரு மண்டபத்தில் அண்ணா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு 10 ரூபா, 5 ரூபா, 1 ரூபா என டிக்கட் வைத்திருந்தார்கள். நான் 10 ரூபா டிக்கட் எடுத்து முன்வரிசையில் அமர்ந்துகொண்டேன். சுற்றுப்பிரயாணக் குழுவில் சென்றவர்கள்கிராமங்களில் தான் கூடிய ஆதரவு இருப்பதாகக்கூறினார்கள். ஈ. வே. க. சம்பத்தும் நீண்டநேரம், அடுத்த தேர்தலில் போட்டியிடவேண்டுமென்றும், ஆட்சியைக் கைப்பற்றுவதன் மூலம்தான் தமிழ் அன்னையை அரியாசனத்தில் ஏற்றலாம் என்றும்வற்புறுத்திக் கூறினார்.

தம்பியின் நம்பிக்கை

அடுத்துப் பேசிய அண்ணாத்துரை 'தம்பி சம்பத் அருகில் இருந்தால், தமிழன்னையை அரியாசனத்தில் ஏற்றுவது மிக சுலபமாக இருக்கும்' எனக் கூறினார். பேச்சின் முடிவில் 'சுற்றுப்பிரயாண குழுவில் சென்றவர்களை, அவர்களின் மனைவிமார் ஆவலுடன் காத்திருப்பார்கள். ஒரு மாதத்திற்கு மேலாக அவர்களை தனிமை வாட்டியிருக்கும். ஆதலால் நான் அதிகம் பேசி நேரத்தை நீடிக்கவிரும்பவில்லை. என்று அண்ணா சிரித்தபடி கூறியதும் மண்டபமே சிரிப்பொலியால் அதிர்ந்தது.

"ஜனநாயகத்தின் அத்திபாரம் கூட்டுறவு இயக்கமே"

கூட்டுறவுச்சங்க வெள்ளிவிழாவில் உள்ளூராட்சி அமைச்சர்

அளவெட்டி, ஞாயிறு 'மக்களுக்காக மக்களின் இயக்கமாக வளர்வதே கூட்டுறவு. இக்கூட்டுறவு இயக்கமே ஜனநாயகத்தின் அத்திபாரம். இந்த ஜனநாயக இயக்கத்தில் தான் அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.''

இவ்வாறு அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 25-வது ஆண்டு விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா கூறினார்.

மேற்படி சங்கத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அளவெட்டி, மல்லாகம் மக்கள் சார்பில் உபசாரப் பத்திரம் வழங்கப்பட்டது.

திரு. பிரேமதாசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கூட்டுறவு இயக்கம் மக்களை நன்றாக முன்னேற்ற தன்னால் ஆன சேவைகளை ஆற்றி வருகின்றது. இதேபோல் அக்கூட்டுறவு இயக்கம் நல்ல தலைவர்களையும் உருவாக்கி வருகின்றது. இந்த இயக்கம் நன்றாக வளர்ச்சி அடைந்து மக்களுக்குத் தன்னால் ஆன சேவைகளை ஆற்றுவதற்கு பல பிரச்னைகள் இருப்பதாக எனக்கு முறையிடப்பட்டுள்ளது. நான் உங்கள் பிரச்னைகள் யாவற்றையும் தீர்த்து உங்கள் சங்கத்தையும் கிராமத்தையும் முன்னேற்ற உதவுவேன் என்பது உறுதி.

இதில் முதலாவதாக தொழில் நிறுவனங்களை நிறுவ இக்கிராமத்துக்கு முக்கிய தேவையானது [illegible] இம்மின்சாரத்துக்கான கடன் திட்டம் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இப்பிரச்னை மிகவிரைவிலேயே நீக்குவதற்கான நடவடிக்கையை எடுப்பேன்.

காங்கேசன்துறை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில், ''எங்கள் நாட்டைப் பொறுத்தவரையில் மூன்று முக்கியமான தொழில்கள் உண்டு. ஒன்று கடற்றொழில், மற்றது கமத்தொழில், மூன்றாவது கைத்தொழில். கடற்றொழில் இப்போது நவீன யந்திரங்கள் மூலம் செய்யப்படுகிறது. இதை எல்லோரும் செய்யக்கூடிய வாய்ப்பில்லை. கமத்தொழில் எங்கள் நாட்டைப் பொறுத்தவரையில் செய்வதற்கு நிலவசதி இல்லை. அமெரிக்காவில் ஒரு குடும்பம் கமஞ்செய்வதற்கு 500 ஏக்கர் வரையில் நிலமிருக்கிறது. நமது நாட்டில் ஓர் ஏக்கர் நிலங்கூட ஒரு குடும்பத்துக்கு கிடைப்பதரிது. ஆதலால் நாங்கள் கைத்தொழில் மூலமே அதிகம் முன்னேற வேண்டும். கைத்தொழில் தொடங்குவதற்குப் பெருந்தொகை முதலீடு வேண்டும். இதைத் தனிப்பட்ட முறையில் எல்லோரும் செய்ய முடியாது. பலர் சேர்ந்த கூட்டுறவு ஸ்தாபனங்களே செய்ய முடியும். கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் தொழில் துறைகளை வளர்ப்பதற்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே அதிகம் வாய்ப்புண்டு'' என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் மேலும் பலர் உரையாற்றினர். மஹாகவி தலைமையில் கவியரங்கொன்றும், கலை நிகழ்ச்சிகளும் இறுதியாக இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...த்தகிளாஸுக்கு ...த்தவர் அண்ணு

...ட்யான உருவத்தின் ...ளே இளகிய மனசு

...அண்ணு ...நடந்தே ...பொழுது ...செய் ...சிந்திக்கச்

...பேச்சு

...கால்நடை ...விழித்து ...தனக் ...ம்பத்திற் ...க்காரருக் ...இல்லை. தமி ...ந்துபோன ...தழைத் ...வதற்காக அரியாச ...தற்காக- ...தமிழ் ...ாடுப்பதற் ...தமது ...ணித்தார். ...ு, அவரின் ...திறவேறி ...ஆட்சி தமி ...துவிட்டது. ...ர் சூட்டப் ...

...ண்ணுவைக் அவரைப் ...பேச்சைக் ...என்ற ...து. அண் ...எங்கிருந் ...விடுவேன். ...ற்றக் குழு ...உள்ள ...ஆராய்ந்து ...மாகச் சுற் ...து, தி. மு. ...ல்வாக் ...சமர்ப் ...வந்திருந் ...ஈ. வே. ...க. விலிருந் ...ல் உள்ள ...அண்ணு ...டம் நடை ...ட்டத்திற்கு ...1 ரூபா ...வைத்திருந் ...ரூபா டிக் ...வரிசையில் ...டன். சுற் ...குழுவில் ...ாமங்களில் ...ரவு இருப் ...ள். ஈ. வே. ...னடநேரம், ...ல் போட்டி ...றும், ஆட் ...ற்றுவதன் ...ழ் அன் ...த்தில் ஏற் ...ற்புறுத்திக்

பத்து வருடத்திற்கு பின்னர் மீண்டும், தமிழ் நாட்டிற்கு தேர்தல் சமயத்தில் சென்றிருந்த போது அண்ணுவை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தேர்தல நேரமாதலால் அவரை வீட்டிலோ, கழக காரியாலயத்திலோ சந்திக்கமுடியவில்லை. அவர் எந்நேரமும் மக்கள் மத்தியில் காணப்பட்டார். சென்னை நகரில் மட்டும் ஒரு நாளில் நாற்பதுக்கு மேற்பட்ட கூட்டங்கள். கூட்டங்களில் மட்டும்தான் அவரைக் காண முடியுந்தது. நள்ளிரவு 12 மணி சென்றலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் அண்ணு வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். இதற்கிடையில் கழகத் தோழர்கள் அண்ணு புறப்பட்டுவிட்டார், வருகிறார்; வந்து கொண்டிருக்கிறார் என ஒலிபெருக்கிமூலம் தகவல் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்.

துணியால் தலையையும் காதையும் மூடிக்கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அண்ணுமட்டும்தான் தலையில் துணி எதுவும் கட்டாமல் காணப்பட்டார். தோளில் ஒருசால்வை இருந்தும் கூட அவர் அதைத்தன் தலையில் கட்ட நினைக்கவில்லை. உண்மையான தொண்டனுக்கு பனி, மழை, வெய்யில் எல்லாம் ஒருதூசு.

அண்ணு பேசி முடிந்தபின்னர் தான் கூட்டம் தலைந்தது. சிறுவர்கள் உட்பட பலர் அந்த ரோட்டிலேயே உறங்கிவிட்டார்கள் 'தூங்கியவர்களையெல்லாம் எழுப்பி வீட்டிற்கு அனுப்பும்படி அண்ணு கழகத் தோழர்களிடம் தெரிவித்தார் அவர் நேராக நித்திரைக்கு தமது வீடு செல்கின்றார். என்று தான் நினைத்துக் கொட்டிருந்தேன். இல்லவே இல்லை. ''வண்ணரப் பேட்டைக்கு வேறு ஒரு கூட்டத்திற்குச் செல்வதாகவும், இன்னும் 5 கூட்டங்களுக்குசெல்லவேண்டுமென்றும் கழகத் தோழரிடம் அண்ணு கூறியபோது நான் அசந்தே போனேன். வண்ணரப் பேட்டைத் தோழர்கள் அண்ணுவை காரில் கூட்டிச் சென்றனர். அவர் நித்திரையின்றி எழைத்ததன் பயனே தேர்தல் முடிவுகள் வந்த பின்னர் அறிந்துகொண்டேன். (தொடரும்)

நமது அலுவலக நிருபர் 'யோகி'

திருவல்லிக்கேணியில் ஒரு கூட்டம். அங்கு மைதானம் இல்லை. ஒரு பூக்கடைதான் மேடை. மக்கள் நீண்ட ரோட்டில்தான் அமர்ந்திருந்தார்கள். கூட்டம் முடியும்வரை அந்த ரோட்டில் போக்குவரத்து எதுவும் கிடையாது. மணி நள்ளிரவு பன்னிரண்டையும் தாண்டிவிட்டது. அண்ணு வந்து சேரவில்லை. பேச்சாளர்கள் எல்லாம் பேசி முடித்துவிட்டார்கள். கூட்டத்தில்ஒருவராவது எழுந்துசெல்லவில்லை கூட்டம் முடிந்துவிட்டதாகக் கூட ஒலிபெருக்கியில் அறிவித்துவிட்டார்கள், கூட்டம் அசையவே இல்லை. அண்ணு சொன்ன சொல் தவறமாட்டார். வந்தேதீருவார் என்ற நம்பிக்கைஅந்த மக்களுக்கு இருந்தது. நள்ளிரவு ஒருமணி... இரண்டு மணி. அண்ணு வரவே இல்லை. ஒலிபெருக்கியில் சினிமாப் பாட்டு போட்டுக் கொண்டிருந்தார்கள். தேர்தல் சமயமாதலால் அண்ணு எந்தக்கூட்டத்தில் இருக்கிறார் என்று எவருமேஅறிந்து கொள்ளமுடியாத நிலைமை. சரியாக 2மணி 20 நிமிடத்தில் அண்ணுவருகிறார்என்று தூரத்தில் ஒரு குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து 'அண்ணு வாழ்க, அண்ணு வாழ்க' என்று பெரும் ஒலி மக்கள் மத்தியில் எழுந்தன. சுமார் 20க்கு மேற்பட்ட கூட்டங்களில்பேசிய அண்ணு மிகவும்களைத்துபோய் வந்து மேடையில் ஏறினர். சில நிமிடத்தில்எங்கும் அமைதி. அண்ணு பேசினாரே பேச்சு வெளிவரவில்லை அவரின் தொண்டை கட்டிவிட்டது இருந்தும்மக்கள் தொண்டன் என்ற ஒரே காரணத்தினால் சில வார்த்தைகள் பேசினார். அந்நேரம்குளிரோ மிக மோசப் பனி சொட்டு சொட்டு எனக்கொட்டிக் கொண்டிருந்தது. கூட்டத்திலிருந்த அத்தனைபேரும்

த. அ. கட்சி கிரிமலை கிளை

அளவெட்டி, ஞாயிறு இலங்கை தமிழரசுக்கட்சியின் கிரிமலைக் கிளை நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கனக. மகேந்திரா தலைமையில் நிகழ்ந்த இவ்வைபவத்தில் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அமிர்தலிங்கம், சென்ட்டர் சு. நடராசா ஆகியோர் உரையாற்றினர். தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை உடல்நிலை திருப்தியடையவேண்டுமென இரண்டு நிமிடநேரம் பிரார்த்திக்கப்பட்டது.

பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ந. சுப்பிரமணியம், செயலாளர்: கனக. மகேந்திரா, தனுதி காரி: திரு. த. கதிரேசு, உபதலைவர்கள்: உமாபதிசிவம், க. சிவலிங்கம், உபசெயலாளர்கள்: திரு. சி. சபாநாதன், திரு. பெ. கந்தன். திரு. எட்வின்ராசா, திரு. செபமாலை, திரு. பொ. கனகராசா, திரு. சி. நடராசா ஆகியோரைக்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது,

விசேஷ ரயில், பஸ் சேவை

திருக்கேதீச்வரம் சிவராத்திரி விழாவுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், திங்கள் இம்மாதம் 15-ம் திகதி திருக்கேதீச்வரத்தில் சிவராத்திரி விழாவை மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. சிவராத்திரியன்று நான்கு சாமபூஜைகளும், வேதபாராயணம், கதாப்பிரசங்கம், இன்னிசைக்கச்சேரிகள் சொற்பொழிவுகள், புராண படனம் ஆகியனவும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இரவு 9 மணியிலிருந்து மறுநாள் காலை 6-40 மணிவரை ஒலிபரப்பும்.

திருக்கேதீச்வரம் செல்லும் யாத்திரீகர்களின் வசதிக்காக திருக்கேதீச்வரம் புகையிரத நிலையத்திலிருந்து கோவில் வரை பஸ் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், காங்கேசன்துறையிலிருந்து காலை 5-35 க்கும், கொழும்பிலிருந்து காலை 5-45 க்கும் விசேஷ ரயில்கள் திருக்கேதீச்வரம் செல்லும். இவை மறுநாள் பகல் 11 மணிக்கும் 10 மணிக்கும் முறையே காங்கேசன்துறைக்கும் கொழும்புக்கும் திரும்பிவரும். யாழ்ப்பாணத்திலிருந்து விசேஷ பஸ் சேவையும் இதற்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எவ்வளவு சீமெந்தும் தொழிற்சாலையில் பெறலாம்

பர்மிட் முறை இன்றுமுதல் ரத்து

யாழ்ப்பாணம், திங்கள் 'பர்மிட்' மூலம் சீமெந்து விநியோகம் செய்தல் இன்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

எவ்வளவு தொகையான சீமெந்தையும்பொது மக்கள் எவராயினும் இன்று முதல் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

இங்குள்ள இரண்டாவது சீமெந்து உற்பத்தி செய்யும் 'சூளை' மீண்டும் இயங்கத் தொடங்கியிருப்பதே இதற்குக் காரணமாகும். கள்ள மார்க்கட்டில் கூடிய விலைக்கு விற்கப்படும் சீமெந்து விநியோகம் இதனால் [illegible] (கா. நி)

சுதந்திரதினவிழா

பகிஷ்கரிப்பு கோரிக்கை கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள் தேசிய அரசாங்கத்துடன் தமிழரசுக்கட்சி இன்னும் வைத்திருக்கும் தொடர்பை துண்டிப்பதா இல்லையா என்பதை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக்குழு இம்மாதம் 5-ந் திகதி கூடி ஆராயவிருக்கின்றது. இதற்கான தீர்மானம் நேற்று நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நேற்றுக் காலை கட்சித் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இன்றைய அரசியல் நிலை பற்றி பல்வேறு கருத்துக்களும் நீண்டநேரம் விவாதிக்கப்பட்ட பின்னர் பின்வரும் தீர்மானம் இங்கு நிறைவேற்றப்பட்டது.

''தமிழரசுக்கட்சிக்கு அளித்த வாக்குறுதிப்படி தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளில் பலவற்றை கடந்த 4 ஆண்டுகளாக தேசிய அரசாங்கம் தீர்க்கத் தவறிவிட்டதால் அரசாங்கத்துடன் உள்ள கட்சியின் தொடர்பை புனராலோசனை செய்து வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு கட்சிப் பாராளுமன்றக் குழுவை இச்செயற்குழு பணிக்கின்றது.''

இதுபற்றிப் பரிசீலனை செய்வதற்காக பாராளுமன்றக்குழு இம்மாதம் 5-ந் திகதி கூடவிருக்கின்றது.

கட்சித் தலைவர் பதவிக்கு விண்ணப்பித்த திருவாளர்கள் எஸ். எம். இராசமாணிக்கம் கே. பி. இரத்தினம், க. ஜெயக்கொடி ஆகியோரின் விண்ணப்பங்கள் இங்கு பரிசீலனை செய்யப்பட்டன.

சுதந்திரதின விழாவை தமிழரசுக்கட்சியினர் பகிஷ்கரிக்க வேண்டுமென கட்சியின் உபசெயலாளர்களில் ஒருவரான திரு. வின்சென்ட் கொண்டுவந்த தீர்மானம் ஆதரிப்பார் இல்லாததால் இறுதியில் ஆராயப்படாமல் கைவிடப்பட்டது.

ஏப்ரல் மாதம் உடுவிலில் நடைபெறவிருக்கும் கட்சியின் வருடாந்தமகாநாட்டு உபசபைகளும் தெரியப்பட்டன. திருவாளர்கள் செ. இராசதுரை எம். பி., க. துரைரத்தினம் எம். பி., வி. அழகக்கோன் எம். பி. தவிர சுமார் 25 செயற்குழு உறுப்பினர்கள் இங்கு சமுகம்கொடுத்திருந்தனர்.

(கா. நி)

(10-ம் கலத் தொடர்ச்சி)

வது விழுந்ததுண்டா? ஒரேயொரு நாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கிலச் செய்திஅறிக்கையில் 'அண்ணுதுரையின் உடல்நிலை ஆபத்தாக உள்ளது' என்ற வார்த்தையை மட்டும் கேட்டேன். பின்னர் அதுவும் இல்லை.

இலங்கை வானொலியில் தப்பு, தப்பு, தப்பு. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியில் அண்துணுரையின் பெயரை உச்சரிப்பதே பாபமா அல்லது கொடுமையா? ஆச்சரியம் நேற்றுக் காலையில் இலங்கை வானொலி தமிழ் ஒலிபரப்பு அண்ணு உடல்நிலைபற்றி திருவாய் மலர்ந்தருளியது!

— ஊர்கற்றி

நாடும் நடப்பும்

'ஒளிவிளக்கு' படம் பார்த்தீர்களா? 'திருடன்' என்று பொலிசாராலும் 'தியவன்' என்று ஊர்மக்களாலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட முத்து தீப் பிடித்தெரியும் ஒரு வீட்டினுள் அகப்பட்டுத் தத்தளிக்கும் குழந்தையை தன்னுயிரையும் துச்சமென மதித்துக் காப்பாற்றுகிறான். குழந்தையை எப்படியோ காப்பாற்றி விடுகிறான். அவன் எரி காயங்களுக்குள்ளாகி உயிருக்காகப் போராடுகிறான். அப்பொழுதுதான் அவனின் அன்புள்ளத்தையும் அவனையும்பற்றி அவ்வூர் மக்கள் அறிந்துகொள்கிறார்கள். அவன் உயிர்தப்ப வேண்டுமென்பதற்காக ஜாதி, மத, இன பேதமின்றி எல்லோரும், ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகளில் பூஜை, பிரார்த்தனை, தொழுகை நடத்தி அவன் உயிரைக் காப்பாற்றும்படி இறைவனிடம் வேண்டுகின்றனர். அவர்களின் வேண்டுதல் வீணாகவில்லை. முத்து (எம். ஜி. ஆர்.) உயிர் பிழைக்கிறான். மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

அந்தக் கதையின்படி முத்துவுக்கு கடவுள் நம்பிக்கையில்லையானாலும் அவன்மற்றவர்களின் நம்பிக்கையில் குறுக்கிடவில்லை. அவர்களின் நம்பிக்கை வீணாகவில்லை.

தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை இப்போது உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். அவருக்காக, அவர் உயிர் பிழைக்க வேண்டுமென்பதற்காக சகலரையும் பிரார்த்தனை செய்யும்படி வேண்டுகோள் விடுத்ததுடன் தாமும் பிரார்த்தனையில் கலந்து கொண்டு வழிகாட்டியிருக்கிறார் தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங். அண்ணுவுக்குக்கூட பிரார்த்தனையில் நம்பிக்கை இல்லையென்று சொல்லிவிட முடியாது. அவருக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ, மற்றவர்களின் நம்பிக்கையில் அவர் குறுக்கிட்டதுமில்லை; தடையாக இருந்ததுமில்லை. மற்றவர்களின் மனது புண்படும்படியாக அவர் நடந்து கொண்டதுமில்லை. அவரை ஒரு 'நாஸ்திகன்' என்று பேசியவர்கள்கூட 'அவர் நல்லவர் அவர் வாழத்தான் வேண்டும்' என்று வாழ்த்துகிறார்களென்றால் அவரைப்பற்றி இப்பொழுதுதான் மக்கள் சரியாக அறிந்து கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் தலைப்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவு. உலகம் அவரைப் புரிந்து கொள்ளும் காலம் வெகுதூரத்திலில்லை. அதற்காகவாவது அவர் வாழத்தான் வேண்டும்.

0 0 0

எங்கும், எவர் வாயிலும் ''அண்ணு எப்படி, அண்ணு துரையின் சுகம் எப்படி?'' என்ற கேள்விதான் வந்து கொண்டிருக்கிறது. பத்திரிகைகளில் அண்ணுவைப் பற்றிய செய்தி என்ன வந்திருக்கிறது, வானொலியில், என்ன சொல்கிறார்கள் என்றுபொதுமக்கள் சென்ற சில நாட்களில் காட்டிவரும் அக்கறை போல என்றுமே காட்டியதில்லை.

ஆனால் நமது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன வானொலிச் செய்தி அறிக்கைகளிலோ அண்ணுவைப் பற்றி எந்தவிதமான தகவலும் தெரிவித்தது என் காதுகளில் விழவில்லை. உங்கள் காதுகளில் எப்போதா

(9-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உள்ளூராட்சி ஊழியர்களுக்கென ஒரு சம்பள நிர்ணயசபை நிறுவவேண்டும்''

7 அம்ச மகஜர் அமைச்சரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

''உள்ளூராட்சி ஊழியர்களுக்கான ஒரு பிரத்தியேகமான சம்பள நிர்ணய சபை ஒன்றை நியமிப்பதோடு, அச்சபையிடம் உள்ளூராட்சி சேவை ஊழியர்கள் தங்கள் கஷ்ட நஷ்டங்களை எடுத்துரைக்கவும் வழி செய்யவேண்டும்.''

இவ்வாறு தெரிவிக்கப்பட்ட மகஜர் ஒன்றை யாழ்ப்பாணம் வந்திருந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் ஜனநாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தினர் கையளித்திருந்தார்கள்.

உள்ளூராட்சி எழுதுவினைஞர் உத்தியோகத்தர்களின் பிரச்னைகள் சம்பந்தமாக 7 அம்சங்களைக் கொண்டதாக இம்மகஜர் தயாரிக்கப்பட்டிருந்தது. இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''தற்போது நடைமுறையிலுள்ள பதவி உயர்வுத் திட்டத்தை மாற்றி அமைக்குமாறும், தரங்களைக் குறைக்குமாறும் இச்சங்கம் தங்களைக் கேட்கின்றது. 'ஊழியர் கோப்பை' அமுல் செய்வதற்கு உள்ளூராட்சி சேவை ஆணைக் குழுவுக்கு அதிகாரத்தை அளித்தல் வேண்டும். உள்ளூராட்சி சேவை அதிகாரசபையில் நிர்ணயிக்கப்படுகின்ற பிரகாரம் ஊழியர் கோப்புக்களை சகல உள்ளூராட்சிமன்றங்களும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

பிரதேச அடிப்படையில் ஊழியர்களது முதுமுறைப் பட்டியல்கள் தயாரிக்கப்படல்வேண்டும்.

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையில் 'சி' பிரதேசத்தில் வேலை செய்யும் ஊழியர்களைச் சிங்களத் தேர்ச்சியில் இருந்து விடுவிக்குமாறும், வழங்கப்படாது தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அவர்களது சம்பள உயர்வுகளை வழங்க ஆவனசெய்யுமாறும் கேட்டுக்கொள்வது.

உள்ளூராட்சி சேவை உத்தியோகத்தர் சகலருக்கும் சமமான முறையில் வீடு கட்டுவதற்கான கடன், கஷ்டநிவாரணக் கடன் போன்றவற்றை வழங்க வேண்டும்.

சிவானந்தன் ஆணைக் குழுவின் இலஞ்சப்பாற்றுச் சகாயநிதி, அநாதைகள் சகாயநிதி அறிக்கையை வெளியிடுவதோடு அதனை அமுல்நடத்தவும்வேண்டும்.

தற்போது உள்ளூராட்சி சேவையின் நடைமுறைக் கட்டளைச் சட்டம் மிகவும் பழையது. ஆகவே கீழ்வருவனவற்றை அமுல்நடத்தக் கூடிய வகையில் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும்.''

1. உள்ளூராட்சி மன்றங்களில் ஊழியர் கோப்பு முறைகளை அமுல் நடத்துதல்.
2. உள்ளூராட்சி மன்றங்களில் பதவிகளை நசுக்குதல், பதவிகளைச் சிருஷ்டித்தல்.
3. 'கொமிட்டெற்' இலஞ்சப்பாற்றுச் சகாயநிதிவழங்குதல்.
4. கால நிலைக் கொடைப்பணம் வழங்குதல்.
5. ஊழியர்களுக்குச் சம்பளம் இலஞ்சப்பாற்றுச் சகாயநிதி. கடன் முதலியன வழங்குவதற்கு ஒரு பொதுநிதி ஸ்தாபித்தல்.
6. உள்ளூராட்சிசேவை ஊழியர்களைக் கொண்ட மேற்படி சபையை நிர்வகித்தல்.
7. உள்ளூராட்சி சேவையுள்ளே ஒரு கணக்குப் பரிசோதனைப் பகுதியை உருவாக்குதலும், அவர்களைக் கொண்டு உள்ளூராட்சி மன்றங்களின் கணக்குகளைச் சரிபார்த்தல்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகங்களைத் திறமைப்படுத்துவதற்கு உள்ளூராட்சிசேவையெழுதுவினைஞர் சேவை அமைப்பில் ஒரு புனரமைப்பு அவசியமெனவும் இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா.நி.)

இன்றைய பலன்

திங்கட்கிழமை

(3-2-69)

தை மாதம், 21 உ

திதி- பிரதமை இரவு 8-25 மேல் துதியை,

நட்சத்திரம்- ஆயிலியம் பகல் 2-14 மேல் மகம்.

ராகுகாலம்- 8-06—9-36.

சுபநேரம்- 12-36 2-06.

இன்று பிறந்தவர்களுக்கு— வணிகத்துறையில் விருத்தியும் வரவிலும் திருப்தி. இனசன மகிழ்ச்சியும் இடர்பல நீங்கும். கல்வி பயிலுவோருக்குச் சித்தியும் கன்னியர் வாழ்வில் கவலையும், எண்ணிய கருமங்கள் தடைப்படுதலும். பொறியியலாளர் களுக்கு இவ்வாண்டு நல்லாண்டாகும்.

மேஷம்- குருவிசுவாசம் குறிக்கோள் வெற்றி.

ரிஷிபம்- செய்தொழில் விருத்தி. தெய்வத்தின் துணை.

மிதுனம்- வரவில் உயர்வுவாழ்த்தும்உண்டு.

கடகம்- தானிய நஷ்டம் தனிவழி நாட்டம்.

சிம்மம்- மக்கள் பிணி மனப்போராட்டம்.

கன்னி- பேச்சுவன்மை பெரும்புகழ் உண்டு.

துலாம்- நினைவில் நிழலாட்டம், நிம்மதி பிறக்கும்.

விருச்சிகம்- அன்னையின் ஆணை, அமைதிக்கு வழி.

தனுசு- இதய பூரிப்பு இன்பத்தின் சாயல்.

மகரம்- அரசபயம், ஆயுதபீடை.

கும்பம்- இருமனம் கலக்கும், இனிமையும் உண்டு.

மீனம்- சிநேகிதர்பகை சிந்தையில் குழப்பம்.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 3—2-69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கான மஞ்சரி.

இரவு 6-15 கோட்டுவாத்தியம், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 நேயர் கடிதங்கள், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கௌரவ உள்நாட்டு மந்திரியின் ஆசிச்செய்தி, 9-40 நேயர் விருப்பம்.

மாணவருக்கு இலக்கண

வெள்ளவத்தை, ஞாயிறு

''சைவத்தையும் தமிழையும் பேணிவளர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் உரைநடை தமிழுக்குப் புது உணர்வையும் உற்சாகத்தையும் கொடுத்தது. தமிழ் இலக்கணத்தை மாணவர்கள் விரும்பிக் கற்கவேண்டும் என்பதற்காக இலக்கணச் சுருக்கம் எழுதிய செம்மல் அவர். அன்னாரை நினைவு கூருவதும் தக்க மரியாதை செய்வதும் தமிழ்கூறும் நல்லுலகத்தின் தலையாய பணியாகும்.''

இவ்வாறு இலங்கை தொழில் நுட்ப மாணவர்கள் நடாத்திய நாவலர் நினைவு தினக் கூட்டத்தில் திரு. எம். திருநாவுக்கரசு பேசும்போது கூறினர்.

திருவாளர்கள் எஸ். சிவபாதசுந்தரம், என். சிவனேசன் ஆகியோரும் பேசினர்.

காணி மேலும் சுவீகரிப்பு

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை தபாற்கூந்தோர் கட்டிடத்திற்கு மேலும் காணி சுவீகரிப்பு செய்யப்படவிருக்கிறது.

மூன்றரை லட்சம் ரூபா செலவில் கட்டப்படவிருக்கும் புதிய தபால்நிலையத்திற்கு அருகில் தபால் தந்தி தொடர்புநிலையமைக்க காணி மேலும் தேவைப்படுகிறது. இதனால் யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் காணி சுவீகரிப்பதற்கான அறிவித்தலைக் கொடுத்துள்ளார். காங்கேசன்துறை பொலிஸ்நிலையத்திற்கு முன்பாக அமையும் இப் புதிய தபாற்கந்தோருக்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

கொழும்பில் சிரமதானம்

கொழும்பு, ஞாயிறு

அகில இலங்கை காந்திய சேவா சங்கத்தின் கொழும்புக்கிளையினர், காந்தி நூற்றாண்டையொட்டி இரத்மலானையிலுள்ள இந்துக்கல்லூரிச் சதுக்கத்தில் முகாம் அமைத்துச் சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 31-ம் திகதி சர்வோதயநிகேதனத்தில் ஆரம்பித்த இச் சிரமதானப்பணி இம்மாதம் 4-ம் திகதிவரை நடைபெறவிருக்கிறது. கட்டடம் அமைத்தல், காய்கறித் தோட்டம் அமைத்தல் போன்ற வேலைகளைச் சிரமதானிகள் மேற்கொண்டுள்ளனர்.

லங்கா தேசிய சர்வோதய சிரமதான சங்கம், லங்கா கிராம சேவை இயக்கம், நாரன்பிட்டி தர்மபால சமாஜய, கொழும்பு இந்துக் கல்லூரி, கொழும்பு விவேகானந்த வித்தியாலயம், நில்வீதி மத்திய மகாவித்தியாலயம், தெஹிவளை தமிழ்ப் பாடசாலை, கொழும்பு பொதுவேலைத் திணைக்கள சர்வோதய சிரமதான சங்கம், தெமட்டக்கொடதமிழ் மகாவித்தியாலயம், புறக் [illegible] சங்கம் ஆகியன இச்சிரமதானப்பணியில் ஈடுபட்டுவருகின்றன.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

சுதந்திரதின விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கையின் 21-வது சுதந்திரதினத்தை நாளை யாழ்ப்பாணத்தில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் சி. பீட்டர்ஸ் தலைமையிலான குழு கவனித்துவருகின்றது.

யாழ்நகரில் நாளை நடைபெறும் சுதந்திரதினவிழாவின் காலை, மாலை நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணம் ஸ்ரேடியம் மைதானத்திலும் இரவு கலை நிகழ்ச்சிகள் திறந்தவெளி அரங்கிலும், வாணவிளையாட்டுக்கள் முற்றவெளியிலும் நடைபெறும்

நிகழ்ச்சிவிபரம் வருமாறு:

காலை 7-15 மணி: அணிவகுப்பு மரியாதையில் கலந்துகொள்பவர்கள் மைதானத்துள் பிரவேசித்தல்.

7-55 மணி அரசாங்கஅதிபர் மைதானத்தினுள் பிரவேசித்தல்.

8 மணி: தேசியக்கொடியை அரசாங்க அதிபர் ஏற்றிவைத்தல்.

8-15 மணி: பொலிஸ், கடற்படையினர், அம்புலன்ஸ்படையினர், 'கடெற்ஸ்' குழுவினர், சாரணச் சிறுவர்கள், பெண் சாரணிகள் கலந்து கொள்ளும் அணிவகுப்பு மரியாதை.

8-40 மணி: மல்லாகம் இந்துக் கல்லூரி மாணவர்களது விளையாட்டு நிகழ்ச்சி.

8-50 மணி: கல்லூரி சிறுவர்களின் இசையுடன் சேர்ந்த உடற்பயிற்சி.

9-00 மணி: கல்லூரி மாணவர்களின் விளையாட்டுக்கள், மாலை 4-00 மணி: தலையணைச்சண்டை.

4-25 மணி: சங்கீதக்கதிரைகள் ஓட்டம்

4-30 மணி: சறுக்கும் கம்பத்தில் ஏறுதல்.

4-45 மணி: மூன்றுகால் ஓட்டம்.

4-55 மணி: 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் ஓட்டம்.

5-10 மணி: பெண்களின் மெதுவான சைக்கிள் ஓட்டம்.

5-20 மணி: பொதுமக்களுக்கான கயிறிழுப்புப் போட்டி.

5-40 மணி: விளையாட்டுப் போட்டி (வயதுவந்தவர்களுக்கும், சிறுவர்களுக்குமான இரு பிரிவு.)

6-00 மணி: திருமதி பிட்டர்வினால் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில் வழங்குதல்.

இரவு திறந்தவெளி அரங்கு கலை நிகழ்ச்சிகள்:-

6-30 மணி: மங்களஇசை.

7-30 மணி: சுன்னாகம் இராமநாதன் கல்லூரிமாணவிகளின் நடனம்.

8-15 மணி: யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடனம்.

9-00 மணி: கலைஞர் வேல் ஆனந்தன் அளிக்கும் திருநெல்வேலி 'கலைக்கோவில்' மாணவியர்களின் நடனம்.

9-45 மணி: வாணவிளையாட்டு. (கா.நி)

புதிய தலைவர்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

அல்லைப்பிட்டிக் கிராமசபையின் புதிய தலைவராக திரு. செ. தவவிநாயகம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக திரு. சோமசுந்தரமும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். அண்மையில் மேற்படி கிராமசபை அலுவலகத்தில் நடைபெற்ற தேர்தலின்போது இருவரும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

புதிய நிர்வாகிகள்

சாவகச்சேரி, ஞாயிறு

கைதடி - நாவற்குழி ஸ்ரீ முருகன் சனசமூக சேவா சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் திரு. நா. இளையப்பா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. நா. இளையப்பா, உபதலைவர் பிரம்மஸ்ரீ மா. விசுவநாதசர்மா, காரியதரிசி: திரு. நா. சண்முகரத்தினம், உபகாரியதரிசி: திரு. க. மனோகரன், தஞ்சதிகாரி: திரு. க. சனகசபாபதி. மேலும் நாவலர்கொண்ட நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

அல்லைப்பிட்டி, ஞாயிறு

புங்குடுதீவு அரியநாயகன் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலனசபையின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர்புதியநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. நாகலிங்கம், உபதலைவர்: திரு. ஆ. பொன்னம்பலம், காரியதரிசி: திரு. மு நடேசு, உபகாரியதரிசி: திரு. த. சுப்பிரமணியம், தஞ்சதிகாரி: திரு. அ. ஆறுமுகம். நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு திவ்யஜீவன சங்கத்தின் பன்னிரண்டாவது வருடாந்தக் கூட்டம் 25-1-69 சனிக்கிழமை (போயாதினமன்று) காலை 10 மணிக்கு நடைபெற்றபோது புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

போஷகர்: திருமதி சிவானந்தம் தம்பையா, தலைவர்: வழக்கறிஞர் திரு. ஆ. செ. நடராசா, உபதலைவர்கள்: திரு. த. நீதிராசா (மூதவை உறுப்பினர்), திரு. நா. க. மயில்வாகனம், திரு. மு. சிவராசா, திரு. ரி. ஆர். விவேகானந்தா, பொதுக்காரியதரிசி: ம. நமசிவாயம், உதவிப் பொதுக் காரியதரிசி: சின்னத்துரை நவரத்தினம், பொருளாளர்: நா. க. விசுவலிங்கம். உதவிப் பொருளாளர்: பொ. கணேசதாசன். பஜனைக் காரியதரிசி: திரு. த. குமாரசிவம், உதவிப் பஜனைக் காரியதரிசிகள்: திருமதி பராசக்தி சிவநாதன், திருமதி பார்க்கவி சீத்தாராமன், நூல்நிலைய அதிபர்: திரு. சின்னத்துரை நவரத்தினம், அங்கத்துவக் காரியதரிசிகள்: திரு. நா. கோபாலகிருஷ்ணன், திரு. நா. சு. தெய்வேந்திரன், திரு. பெ. பாலகிருஷ்ணன், யோகாசனக்காரியதரிசி: திரு. வ. சண்முகம், உதவி யோகாசனக் காரியதரிசி: திரு. ச. திருச்செல்வம், ''யோகசஞ்சிகை'' ஆசிரியர்: பிரம்மஸ்ரீ ஆ. சுப்பிரமணிய ஐயர், கணக்குப் பரிசோதகர்: திரு. மு. நடராசா.

அல்லைப்பிட்டி, ஞாயிறு

திருகோணமலை அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் ஆர். தெய்வேந்திரம், ஊர்காவற்றுறை சுகாதார அலுவலக தலைவராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 நாள் டெஸ்ட்: சமமான முடிவு

எம். சி. சி. கோஷ்டியின் அபாரத் துடுப்பாட்டி

தென்னக்கோன், றீட், றஞ்சித் ஆகியோரின் புதிய சாதனை

கொழும்பு, ஞாயிறு

இங்கிலாந்து எம். சி. சி. கிரிக்கெட் கோஷ்டிக்கும், இலங்கை கிரிக்கெட் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் கொழும்பு ஓவல் மைதானத்தில் நடைபெற்ற மூன்று நாள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இலங்கை தெரிவுக் கோஷ்டிக்கு மைக்கல் திசேரா தலைமை தாங்குவார் என இருந்த போதிலும், கடைசி நேரத்தில் அவருக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக இப் போட்டியில் அவர் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதால், இலங்கைக் கோஷ்டிக்கு திரு. றீட் தலைமை தாங்கினார்.

''பூவா - தலையா'' என்ற போட்டியில் இலங்கை வெற்றி பெற்றதால், இலங்கைக் கோஷ்டியே முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. இலங்கைக் கோஷ்டி இப் போட்டியில் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. வீரர் தென்னக்கோன் 1-வது இன்னிங்ஸில் மிகவும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 101 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். இலங்கைக் கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 283 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது

ஸ்கோர் விபரம் பின்வருமாறு;- றீட்-07, றஞ்சித் பெர்ணண்டோ-47, தென்னக்கோன்-101, கெயின்-08, எச். ஐ. கே. பெர்ணண்டோ-11, குலாம் ரஸீக்-14, போலனிவித்த-27, டி. சாபந்து-01 (ஆட்டமிழக்கவில்லை), பி. கெலிகமுவா-09, டி. வீரசிங்கா-22, பிச்சாட் 19 (ஆட்டமிழக்கவில்லை).

எம். சி. சி. கோஷ்டி தனது 1-வது இன்னிங்ஸை ஆரம்பித்ததும், இக் கோஷ்டியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பிறேடோ-16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின் துடுப்பெடுத்தாடிய எட்றிச், பிலெச்சர், கிறேவினி ஆகியோரின் துடுப்பாட்ட கிரிக்கெட் பிரியர்களுக்கு ஒரு 'வாணவேடிக்கையாகவே அமைந்தது. இம் மூவரும் மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடி முறையே 177, 81, 106 ஓட்டங்களைப் பெற்றுஆட்டமிழந்தனர். பசில் டி ஒலிவேரா-18 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். எம். சி. சி. கோஷ்டி 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 406 ஓட்டங்களை எடுத்ததும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இலங்கைக் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்ததும், இக் கோஷ்டியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான காப்டன் றீட்டும், றஞ்சித் பெர்ணண்டோவும் மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடினர். இவ் இருவரையும் ஆட்டமிழக்கச் செய்வதற்காக எம். சி. சி. கோஷ்டியின் பந்து வீச்சு வீரர் பல தந்திர வழிகளைக் கையாண்டும், ஈற்றில் ஒன்றுமே பலிக்காமல் போய்விட்டது. இவ் விரு வீரரும் இப் போட்டி முடிவடையும் போது ஆட்டமிழக்காமல் முறையே 50, 58 ஓட்டங்களை எடுத்து, இலங்கை கோஷ்டியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் வரிசையில் ஓர் புதிய சாதனையை நிலை நாட்டினர்.

இலங்கைக் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸில ஆட்ட முடிவில் விக்கெட் நஷ்டம் எதுவுமின்றி 119 ஓட்டங்களை 90 நிமிடத்தில் எடுத்தது. (தே. நி)

பொலிஸார் தோற்றனர்

அளவெட்டி. ஞாயிறு காங்கேசன் துறைப் பொலிஸாரை வென்றனர் மாவிட்டபுரம் கோஷ்டியினர்.

மாவிட்டபுரம் ஐக்கிய விளையாட்டுக் கழகமும், காங்கேசன்துறைப்பொலிஸ் கழகமும் காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் ஒரு சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்டன.

ஆரம்பமுதல் இறுதி வரை விறுவிறுப்பாகவும், ரசிக்கத்தக்கதாயும் அமைந்திருந்த அப்போட்டியில் மாவிட்டபுரம் கோஷ்டியினர் வெகு திறமையாக ஆடினர். போட்டி ஆரம்பமாகி 5 நிமிடத்தில் மாவிட்டபுரம் கோஷ்டியைச் சேர்ந்த தர்மராசா ஒரு கோலை மிகவும் சாதுரியமாகப் போட்டார். இடைவேளையின்போது பொலிஸ் கோஷ்டி ஒரு கோலும் போடாத காரணத்தால் மாவிட்டபுரம் முன்னணியில் திகழ்ந்தது.

இடைவேளையின் பின் புதிய உத்வேகத்துடன் ஆடிய பொலிஸ் கோஷ்டியினர் மாவிட்டபுரம்கோஷ்டியினரை விடத் திறமையாக ஆடினர். இறுதியில் போட்டி முடிவடைய 2 நிமிடம் இருக்கும்போது மாவிட்டபுரம் கோஷ்டியைச் சேர்ந்த குகதாசன் மேலும் ஒரு கோலை அடித்தார். இறுதியில் 2 - 0 கோல்களால் மாவிட்டபுரம் கோஷ்டி பொலிஸ்கோஷ்டியினரைத் தோற்கடித்தது.

யாழ். உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். உதைபந்தாட்டச் சங்கம் தனது வடுடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை இம்மாத நடுப் பகுதியில் ஆரம்பிக்கவிருக்கின்றது. இம்முறை இச்சுற்றுப் போட்டியில் பல புதிய விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

70 நிமிடங்களுக்கு நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி இம்முறை 90 நிடடங்களாக நீடிக்கப்பட்டிருப்பதுடன் இப்போட்டி முடிவடையும்வரை இரு வீரர்களை எந்நேரமும் மாற்றி விளையாடலாம் என்ற புதிய விதியும் இம் முறைச் சுற்றுப் போட்டியில் சேர்க்கப்படவிருக்கின்றது.

இச்சுற்றுப் போட்டியை மிகவும் விரிவான முறையில் நடாத்தவதுற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. பாலசுப்பிரமணியம் மேற்கொண்டுள்ளார். (தே. நி.)

நேத்தாஜி வென்றது

சுன்னாகம், ஞாயிறு

தெல்லிப்பழை சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுக கழகத்தினரால் நடாத்தப்படும் மென்பந்து சுற்றுப் போட்டியில் சுன்னாகம் நேத்தாஜி விளையாட்டுக்கழகம் அம்பனை சைனிங் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை 102 ஒட்டங்களால் தோற்கடித்தது.

கடலில் வீழ்ந்து மரணம்

காங்கேசன்துறை, ஞாயிறு

மயிலிட்டியைச் சேர்ந்த இராசரத்தினம் என்பவர் மீன்பிடிக்கச் சென்றபொழுது கால்சறுக்கிக் கடலில் வீழ்ந்து மரணமானார். இவருக்கு நீச்சல் தெரியாததினால் மரணம் நிகழ்ந்ததாக இவருடன் மீன் பிடிக்கச் சென்றவர்கள் தெரிவித்துள்ளனர்.

சாராய வழக்கில் ரூ. 50 அபராதம்

அளவெட்டி, ஞாயிறு

வடிசாராயம் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

ஊரெழுவைச் சேர்ந்த கே. கந்தையா என்பவர் சட்டவிரோதமாக வடிசாராயம் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டிப் சுன்னகம் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே நீதிபதி 50 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

பண்ணிசை

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் சித்திவிநாயகர் ஆலயத்தில் தமிழிசைமணி பி. எஸ். இராசசேகரனின் மாணவர்கள் இசையாசிரியர் எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் பண்ணிசை நடாத்தினர்கள். தேவார திருவாசகங்கள் பண்ணிசையுடன் பாடப்பட்டன.

கோரிக்கை

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு பட்டினசபைத் தலைவர் ஆர். செல்வரத்தினம், பண்டத்தரிப்பில் உடனடியாக ஒரு மக்கள் வங்கிக் கிளையைத் திறந்து தருமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் கோரியுள்ளார்.

துணை ஆயருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். துணை ஆயர் அதி வண. எல். ஆர். அன்ரனி அடிகளார்க்கு, யாழ். 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்தினர் ஒரு பொது வரவேற்பு விழாவை இன்று நடத்துகின்றது. இவ் வரவேற்பு விழா 'கிறீன்பீல்ட்' கழகத் தலைவர் பி. எவ். சேவியர் தலைமையில், இக் கழகச் சாலையில் நடைபெற விருக்கிறது. (தே. நி)

235வது சுவீப்

நெல்லியடியில் இழுக்கப்படும்

யாழ்ப்பாணம், திங்கள்

235வது தேசிய லொத்தர் சுவீப் இம்மாதம் 27ந் திகதி நெல்லியடியில் இழுக்கப்பட விருக்கின்றது.

முதலாவது சுவீப்பை உடுப்பிட்டி எம். பியும் உப சபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரமும், இரண்டாவது சுவீப்பை படுத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினமும் மூன்றாவது சுவீப்பை படுத்தித்துறை நகரசபைத் தலைவரான திரு. என். நடராஜாவும் இழுப்பார்கள்.

(கா. நி.)

உபதபால் அதிபர்கள் நியமனம்

"தகுதிகாண் பரீட்சை மூலமே தெரிவு செய்யவேண்டும்"

உடுவில் எம். பி. அமைச்சரைக் கேட்டுள்ளார்

யாழ்ப்பாணம், திங்கள்

உபதபால் அதிபர்கள் நியமனத்தில் எம். பி.க்களின் சிபார்சை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்றும், நடைமுறை விதியை மாற்றியமைக்க வேண்டுமென்றும் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தபால் அமைச்சரைக் கடிதமூலம் கேட்டுள்ளார்.

தமது தொகுதியிலுள்ள குப்பிளான், சண்டிலிப்பாய் உபதபாற்கந்தோர்களுக்கு உபதபால் அதிபர்களைத் தெரிவுசெய்யும் விஷயத்தில் விண்ணப்பதாரிகளுக்கு எழுத்துப்பரீட்சைவைத்து அதன் மூலம் அதிகபுள்ளிகளைப் பெறுபவர்களையே தெரிவு செய்யவேண்டுமென்றும், எல்லாப்பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளி விபரங்களும் யாழ். மாவட்டதபால் அத்தியட்சகர் கந்தோரில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டுமென்றும், அநாவசிய தலையீடுகளையும்தவறுன முடிவுகளையும் தவிர்க்க இது ஒரு நல்லவழியாகுமென்றும், உடுவில் எம். பி. தபால் அமைச்சரைக் கேட்டுள்ளார்.

இதுவரை நடைமுறையிலிருந்துவரும் எம். பி.க்களின் சிபார்சு மற்றும் நேர்முகப்பரீட்சை முறையையும் இனிமேல் கைவிட்டுவிட வேண்டுமென்று திரு தர்மலிங்கம் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

உருவப்படம் திரைநீக்கம்

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் பிரசவ விடுதியின் 14-ம் இலக்க அறைக்கு ரூபா 5000/- நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. திருமதி நாகமுத்து வள்ளியம்மையின் நினைவாக மலேசியாவில் முவார் என்னும் இடத்தில் சுகாதாரப் பரிசோதகராகக்கடமையாற்றிய திரு. நாகமுத்து கணபதிப்பிள்ளையால் மூளாயிலுள்ள திரு. இ. தம்பையா ஜே. பி. மூலம் இப் பணம் கொடுக்கப்பட்டது. வைத்தியசாலை நிர்வாக மண்டபத்தில் திருமதி நாகமுத்து வள்ளியம்மையின் படம் சங்கத்தலைவர் திரு. ச. சம்பந்தமூர்த்தியால் திரைநீக்கம் செய்யப்பட்டது. திருமதி. நாகமுத்து வள்ளியம்மையின் முன்மாதிரியை திருவாளர்கள் இ. தம்பையா ஜே. பி. அ. கந்தையா, தா. கிருஷ்ணர் ஆகியோர் பாராட்டிப் பேசினர். தேநீர் விருந்துடன் வைபவமும் நடைபெற்றது.

மனேஜர் தாக்கினர்

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மனேஜர் தும்புக்கட்டையால் தாக்கியதாக காங்கேசன்துறை வாசி ஒருவர் காங்கேசன்துறைப் பொலிசில் புகார்செய்துள்ளார்.

பயறு வாங்கச் சென்ற பொன்னுத்துரை என்பவர் காங்கேசன்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடை மனேஜருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து மனேஜரால் தாக்கப்பட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

வாலிப முன்னணிக்கிளை

எஸ். ஜே. வி. க்கு மகஜர்

அளவெட்டி, ஞாயிறு

தொலிப்பழை புகையிரத நிலையத்தை மிகவிரைவில் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக வாலிப முன்னணிக் கிளைக் குழுவிடம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினார்.

தமிழரசு வாலிப முன்னணியின் தெல்லிப்பளைக் கிளைத்தலைவர் திரு. சே. சிச்தியானந்தன், செயலாளர் திரு. வே. பாலச்சந்திரன் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று காங்கேசன்துறை எம். பி. திரு. ஏஸ். ஜே. வி. செல்வநாயகத்தை அவருடைய இல்லத்தில் சந்தித்து தெல்லிப்பளையில் உள்ள பல சீர்கேடுகள் பற்றி ஒரு மகஜரைச் சமர்ப்பித்தனர்.

தெல்லிப்பளை புகையிரத நிலையத்தை திருத்தி விஸ்திரிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தெல்லிப்பளைச் சந்திக்கு அருகாமையில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் நீர் தேங்கி நிற்பதனால் அதில் ஒரு வாய்க்கால் அமைக்க வேண்டுமென்றும் யாழ்-கீரிமலை சேவையில் உள்ள கடுகதி பஸ்சை தெல்லிப்பளை கூட்டுறவு வைத்திய சாலையில் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அம்மகஜரில் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது.

இக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட எஸ். ஜே. வி. செல்வநாயகம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இப் பிரச்சனைகளை தீர்த்து வைக்க முயற்சிப்பதாக மேற்படி குழுவிடம் உறுதியளித்தார், அங்கீகரிக்கப்படாத கைத்தொழில் நிலையங்கள் கூடி அங்கீகரிக்கும் படி கேட்டால் அதற்கு தம்மால் செய்யக் கூடிய உதவியைச் செய்வதாக அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிங்கள மக்களை பாதிக்காத உரிமைகூட கிடைக்கவில்லை'

—கிளிநொச்சி எம். பி.

'வகுப்பு கலவரம் வந்தால் முதலில் பொசுங்குபவன் நான்'

—உள்ளூராட்சி அமைச்சர்

கிளிநொச்சி, திங்கள் தமிழ் மக்களுக்கு உருப்படியான உரிமையேதும் கிடைத்து விடவில்லை. சிங்கள மக்களை எந்த விதத்திலும் பாதிக்காத உரிமைகூட தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. தேசிய அரசாங்கத்தை நம்பி தமிழ் மக்கள் ஏமாந்து விட்டார்களா என்ற ஒரு சூழ்நிலை இப்போது பரவலாக ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கிளிநொச்சி எம். பி, பண்டிதர் கா.போ. இரத்தினம் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு கிளிநொச்சியில் அளிக்கப்பட்ட வரவேற்பில் தலைமைவகித்துப் பேசுகையில் எடுத்துக் கூறினார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த வரவேற்புக் கூட்டத்தில் திரு இரத்தினம்மேலும் பேசுகையில் தேசிய அரசாங்கத்துக்கு தமிழரசுக் கட்சியினர் அளித்துவரும் ஆதரவு முறியும் தறுவாய்க்கு சென்று கொண்டிருப்பது போல் தோன்றுகிறது என்றும் இந்த சூழ்நிலையை பிரதமருடன் மிக நெருக்கமாக இருக்கும் அமைச்சர் திரு. பிரேமதாசா உணர்ந்து ஏற்ற நடவடிக்கை எடுப்பாரெனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தை உருவாக்க தமிழ் மக்கள் பெரிதும் உதவியதாக அமைச்சர் கூறி வருவது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும். அதே நேரத்தில் இவ்விதம் கைகொடுத்த தமிழ் மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவது மிகவும் வேதனையளிப்பதாக விருப்பதாக கிளிநொச்சி எம்பி சுட்டிக் காட்டினார்.

தமிழ் பகுதிகளுக்கு தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் அனுப்பப்படுவதே தமிழ் பேசும் மக்களுக்கு சௌகரியத்தையளிப்பதாகவிருக்கும் என விடுக்கப்பட்டுவரும் கோரிக்கை இப்போது புறக்கணிக்கப்பட்டுவருவதாகவும் கிளிநொச்சியில் இவ்வித கஷ்டங்களை மக்கள் இப்போது அனுபவித்து வருகிறார்கள் என்றும் திரு. இரத்தினம் குறிப்பிட்டார்.

நாட்டில் மீண்டும் வகுப்புக் கலவரம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம்கூட இப்போது தமிழ் மக்கள் மனதில் இலேசாகப் பரவி வருவதாகவும் திரு. இரத்தினம் எடுத்துக் கூறினார்.

உள்ளூராட்சி அமைச்சர் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு பதிலளித்துப் பேசுகையில் கூறியதாவது:—

கிளிநொச்சி எம். பி. வீணாகக் கலவரமடைந்துள்ளவர் போலத் தோன்றுகிறது.

மீண்டும் வகுப்புக் கலவரம் வருவதாக இருந்தால் அதில் முதலில் பொசுங்குபவன் நானாகத்தானிரிருப்பேன்.

தச்சன்தோப்பு துப்பாக்கிச் சூடு

சந்தேகநபர் இருவர் றிமாண்டில்வைக்கப்பட்டனர்

சாவகச்சேரி, ஞாயிறு கடந்த இருவாரங்களுக்கு முன்பு தச்சன்தோப்பில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் சம்பந்தமாகப் பொலிசாரால் தேடப்பட்டுவந்த சந்தேகநபர்களில் சுப்பிரமணியம், சீனிவாசகம்ஆகியஇருவரும் பொலிசாரிடம் சரண்புகுந்தனர். இவர்களை ரிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். கைதடியைச் சேர்ந்த முத்தையா என்பவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

சந்தேகத்தின்பேரில் ரிமாண்டில் வைக்கப்பட்ட நபர்கள் அனைவரும் அடையாள அணிவகுப்பிற்கு ஆஜர் செய்யப்படுவாரெனத் தெரியவருகிறது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த மூவரும் குணமடைந்து வருகின்றனர்.

இன்னமு நினைவிழந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவல்மீறி வீதிகளில் மக்கள் நெரிசல்

அடையாறு ஆஸ்பத்திரியிலிருந்து, நுங்கம்பாக்கத்தில் உள்ள முதல் அமைச்சரின் வீடு வரை வீதியின் இரு பக்கத்திலும் பொலிசார் கீயூவில் நிறுத்தப்பட்டுள்ளனர். வீதியில் அனாவசிய நெரிசல் ஏற்படாதவாறு பொலிசார் கவனித்து வருகின்றனர். வீதிகளில் காணப்படும்மக்கள் கூட்டத்தினர் அண்ணா, அண்ணா என்று கதறிய படியே, திரு அண்ணாதுரையின் உடல் நிலையை ஆவலுடன் வினாவியபடியிருக்கின்றனர்.

ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

ஆஸ்பத்திரியை நோக்கி நெருக்கியடிக்கும் மக்கள் கூட்டத்தை கட்டுப் படுத்துவதற்காக பொலிஸ் 'வானில்' ஒலிபெருக்கியில் அண்ணாவின் கட்டளையான கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து அமைதியாகயிருக்கும்படி அறிவிக்கின்றனர்.

அண்ணாவின் உடல்நிலை பற்றி அடிக்கடி தெரிவிக்கப்படும்போது ஆஸ்பத்திரியின் வெளியே குழுமி நிற்கும் பெண்களும் ஆண்களும் அண்ணா, அண்ணா என்றுகதறியபடியே கூக்குரலிடுகின்றனர். முதலமைச்சரின் தேகநிலை பற்றி அறிவிக்கப்படும் போது மக்கள் ஆஸ்பத்திரியை நோக்கி நெரிபடுகின்றனர். பூட்டப்பட்டுள்ள ஆஸ்பத்திரி கேட்டுகளின் மீது மக்கள் பாய்ந்து ஓட முயல்கின்றனர். பொலிசார் இரவுபகலாக இவர்களைக் கட்டுப்படுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று காலையில் அண்ணாவின் உடலில் கடும் காய்ச்சல் ஏற்படுவதற்கான அறிகுறி ஏற்பட்டதென்றும், ஆனால் கட்டுப்படுத்தப்பட்டு வருவதாகவும் காலை 8 மணிக்கு விடுக்கப்பட்ட அறிக்கை கூறியது.

காமராஜருடன் பேச முயன்றார்

கடந்த 30-ந் திகதி அண்ணாவின் உடல்நிலை படுமோசமாகவிருந்தபோது தம்மை பார்க்க வந்தவர்களுடன் கண்திறந்துபேசஅவர்முயன்தாகவும் கூறப்படுகிறது. திரு. காமராஜ் அண்ணாவைப் பார்க்கச் சென்றிருந்த சமயம் முதலமைச்சர் அவரைப் பார்த்து சில வார்த்தைகள் பேசமுயன்றதாகவும் இதைப் பார்த்த திரு. காமராஜ் பேச முயல வேண்டாமென்று அண்ணாதுரையிடம் கூறியதாகவும் சொல்லப்படுகிறது.

முதல் மந்திரி அண்ணாதுரையின் உடல் நிலையை முன்னிட்டு, அசெம்பிளி, மேல்சபை இரண்டும் கால வரம்பின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக சட்டசபை இலாகா காரியதரிசிகள் அறிவித்தனர்.

அசெம்பிளி உதவி சபாநாயகரும், மேல்சபைத் தலைவரும், திரு. நெடுஞ்செழியனையும், எதிர்க் கட்சிகளின் தலைவர்களையும் கலந்தாலோசித்த பிறகு இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

அசெம்பிளி சபாநாயகர், மேல் சபை உதவி தலைவர் தேர்தலுக்கு ஏற்கனவே தேதிகள் அறிவிக்கப்பட்டிருந்தன. ஆனால், இரு சபைகளும் கால வரம்பின்றி ஒத்தி வைக்கப்பட்டிருப்பதை முன்னிட்டு, இந்த இரு தேர்தல் தேதிகளும் ரத்துச் செய்யப்பட்டு விட்டன.

யாழ். மார்க்கட் வேலைக்கு மீண்டும் கேள்விப்பத்திரம்

இறுதி முடிவு எடுப்பதற்காக 1-ம் திகதி சபை கூடுகிறது

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையில் கட்டப்படவிருக்கும் நவீன மார்க்கட்டுக்கு வேண்டிய 30 லட்சம் ரூபாவில் அரசாங்கம் வழங்கவிருக்கும் முதல் வருட நிதியான 6 லட்சம் ரூபா விரைவில் கிடைக்கவிருக்கின்றது. அமைச்சர் பிரேமதாசா இந்த உறுதியை இங்கு தெரிவித்தார். ஆனால் கட்டட வேலைக்காக மீண்டும் கேள்விப்பத்திரங்கள் கோருவதுபற்றி ஆலோசிப்பதற்கான சபையின் விசேஷ கூட்டமொன்று இம் மாதம் 10-ம் திகதி அவசரம் அவரசமாக நடாத்தப்படவிருக்கின்றது.

அமைச்சர் பிரேமதாசாவுடனும் அவருடன் வந்த உள்ளூராட்சி சேவைக்குழுவுடனும், யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வரும், உறுப்பினர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இது பற்றிக் கலந்தாலோசித்த பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

எப்படியும் மார்ச் மாத நடுப்பகுதிக்குள் நவீனமார்க்கட் வேலையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவே, 'டெண்டர்கள்' மீண்டும் கோரப்பட விருப்பதாகவும் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். 10-ம் திகதி நடைபெறும் சபையின் விசேஷ கூட்டத்தில் இதற்கான இறுதி முடிவு எடுக்கப்படும்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தான மின்சார நிலையக்காணியை எவ்வாறு சுகாதார இலாகா சுவீகரித்தது என்பது தனக்கு ஆச்சரியத்தைக் கொடுப்பதாக இங்கு தெரிவித்த அமைச்சர் இதற்கான நஷ்டஈட்டைபெற முயற்சி எடுப்பதாகவும் மாநகர சபையினருக்குத் தெரிவித்தார்.

சேரி ஒழிப்புத்திட்டத்தின் கீழ்வீடமைப்புத்திட்டத்தை மேற்கொள்ள ஏற்கனவே வழங்க முடிவு செய்யப்பட்ட ஒரு லட்சம் ரூபாவை விட மேலும் வழங்குவது பற்றியும் அமைச்சர் இங்கு தெரிவித்தார். (கா. நி.)

மலேசியா சிங்கப்பூரில் தைப்பூச விழா

கோலாலம்பூர், பெப்,2 மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் சுப்பிரமணியர் தைப்பூச விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இங்குள்ள சுப்பிரமணிய ஆலயங்களில் இவ்விழாவை தரிசிக்க பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்தார்கள். காவடி ஆட்டங்களில் இளைஞர்களும் பெரியோர்களும் பக்திப் பரவசத்துடன் ஈடுபட்டார்கள்.

யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை ஆங்கில வகுப்புக்கள்

கல்விப் பொதுத்தராதர சாதாரண உயர்நிலை வகுப்புக்களுக்கும் ஆங்கில ஆசிரியர் பரீக்ஷைகளுக்கும் மிகச் சிறந்த முறையில் ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. காலை 11-30க்கும் மாலை 6 மணிக்கும் இடையில் நேரிலோ அல்லது கடிதமூலமோ விண்ணப்பிக்கவும். 784

அரசாங்கத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறப்படாவிட்டால் அடுத்த மாதம் 14ந் திகதி மட்டக்களப்பில் நடைபெறும் குழுக்கூட்டத்தில் தலைவர் தெரிவு நடைபெறுமெனவும் தெரிகிறது.

நேற்றைய கூட்டத்தில் கிழக்குமாகாணம் பல விதங்களிலும் புறக்கணிக்கப்படுவதுபற்றி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் கவலையும் கண்டனமும் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

தங்கச்சங்கிலி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு தியேட்டரின் முன்னால் கண்டெடுக்கப்பட்ட தங்கச் சங்கிலியொன்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இந்தச் சங்கிலி நுவரெலியா இறைம்பாடை கியர்காடு தோட்டத்தைச் சேர்ந்த மா. கணபதி என்றஇளைஞரால் நேற்று மாலை கண்டெடுக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாக பொலிசார்தெரிவித்தனர். சங்கிலியின் சொந்தக்காரர் தகுந்த அத்தாட்சிகாட்டி அதைப்பெற்றுக்கொள்ளுமாறு பொலிசார்தெரிவித்தனர்.

'மனித சமுதாயத்தின் வேதப் புத்தகம்'

புதுச்சேரி, பெப்.2 'உலக மொழிகளில் தமிழ் மொழி சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. வெழிநாடுகளில்கூட தமிழ் மொழிக்கு தனி மதிப்பு இருக்கிறது.' இவ்வாறுபுதுச்சேரி லெப்டினண்ட் கவர்னர் பி.டி. ஜெட்டி புதுவை தமிழ் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவில் பேசியபோது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் திருக்குறள் மனித சமுதாயத்தின் வேதபுத்தகமென்றும் வள்ளுவர்பெரும் ஆராய்ச்சி அறிஞர் என்றும் குறிப்பிட்டார்.

தமிழின் தொன்மைபற்றியும் அவர் விரிவாக எடுத்துக் கூறினார்.

ஆழிபுரத்தில்

சுதந்திரதின விழா

புலோலி, ஞாயிறு குடத்தனை ஆழிபுரத்தில் நாளை சுதந்திரதின விழா கொண்டாடப்படவிருக்கின்றது. குடத்தனை ஆழிபுரம் மைதானத்தில் நிகழவிருக்கும்இவ்விழாவை குடத்தனை கிராமச் சங்கத்தினரும், வடமராட்சி காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தனும் ஒழுங்கு செய்துள்ளனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 3-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org